ISSN-2706-0055
9 772706 005009

# புள்ளடியின் பலம்

தேர்தல் ஆணைக்குழு
2024 செப்டம்பர்-டிசம்பர் மலர் 8 இதழ் 3

## சனாதிபதித் தேர்தல் பாராளுமன்றத் தேர்தல் 2024



# சனாதிபதித் தேர்தல் – 2024

**சன்ன பீ. த சில்வா, பணிப்பாளர் (ஆராய்ச்சி மற்றும் திட்டமிடல்)**
தேர்தல் ஆணைக்குழு

## 1. அறிமுகம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 30 ஆம் உறுப்புரைக்கமைய அரசின் தலைவரும் நிறைவேற்றுத் துறையினதும் அரசாங்கத்தினதும் தலைவரும் ஆயுதந்தாங்கிய படைகளின் படைத்தலைவருமான நிறைவேற்று சனாதிபதி, மக்களின் வாக்குகளினால் தெரிவுசெய்யப்படுகின்றார். அரசியலமைப்பிலும் 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்திலும் குறிப்பிடப்படும் ஏற்பாடுகள் இத்தேர்தல் செயன்முறைக்குரிய மிக முக்கிய சட்டவாக்கங்களாகும். 1978 இரண்டாவது குடியரசு அரசியலமைப்பினால் அறிமுகப்படுத்தப்படும் நிறைவேற்று சனாதிபதி பதவிக்குப் பொருத்தமான ஆள் ஒருவரைத் தெரிவுசெய்வதற்காக முதல் தடவையாக 1982 ஆம் ஆண்டிலேயே தேர்தலொன்று நடத்தப்பட்டது. அதனைத்தொடர்ந்து முறையே 1988, 1994, 1999, 2005, 2010, 2015, 2019 ஆம் ஆண்டுகளில் 08 சனாதிபதித் தேர்தல்கள் நடைபெற்றுள்ளன. இலங்கையின் 9 ஆவது சனாதிபதித் தேர்தல், 2024.09.21 ஆம் திகதி நடைபெற்றது. இருப்பினும், தேர்தலொன்று இன்றி அரசியலமைப்புத் திருத்தமொன்றின்படி 1978 ஆம் ஆண்டில் ஜே.ஆர். ஜயவர்தன அவர்களும், 1991 ஆம் ஆண்டில் சனாதிபதி ரணசிங்க பிரேமதாஸ அவர்கள் திடீர் விபத்தொன்றில் மரணமடைந்ததன் காரணமாக டீ.பி.விஜேதுங்க அவர்களும், 2022 ஆம் ஆண்டில் சனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவர்கள் பதவி விலகியதன் காரணமாக ரணில் விக்ரமசிங்க அவர்களும் சனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டனர். **(இலங்கையில் நடைபெற்ற எட்டு சனாதிபதித் தேர்தல்கள் பற்றிய பூரண தகவல்கள் "புள்ளடியின் பலம்" சஞ்சிகையின் கடந்த இதழில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.)**

## 2. வேட்பாண்மைக்கான தகைமைகள்

அரசியலமைப்பின் 31(1) உறுப்புரைக்கமைய சனாதிபதி பதவிக்குத் தெரிவு செய்யப்படுவதற்கு தகைமை பெற்றுள்ள ஆளொருவரின் பெயர்,

(அ) அங்கீகரிக்கப்பட்ட ஓர் அரசியல் கட்சியினால் அல்லது

(ஆ) அவர் நிறைவேற்றுத்துறையின் தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினரொருவராக இருப்பின், அன்றேல் அவ்வாறு உறுப்பினரொருவராக இருந்தவரெனில், வேறு அரசியல் கட்சியொன்றினால் அல்லது யாதேனும் தேருநர் இடாப்பில் பெயர் சேர்க்கப்பட்டுள்ள தேருநர் ஒருவரினால்

சனாதிபதி பதவிக்கு முன்மொழியப்படலாம்.

## 3. வைப்புப் பணம் செலுத்துதல்

1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின் 8 ஆம் பிரிவிற்கமைய அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியொன்றினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட வேட்பாளர் ஒருவர் சார்பாக ரூ.50,000.00 தொகையும், வேறு அரசியல் கட்சியொன்றினால் அல்லது தேருநரொருவரினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட வேட்பாளர் ஒருவர் சார்பாக ரூ.75,000.00 தொகையும் வைப்புப் பணமாக செலுத்தப்பட வேண்டும்.

2019 நவம்பர் மாதம் 16 ஆம் திகதி நடைபெற்ற சனாதிபதித் தேர்தல் முடிவுகளின்படி சனாதிபதி பதவிக்குத் தெரிவுசெய்யப்பட்ட கோட்டாபய ராஜபக்ஷ அவர்களின் நியமனம் பற்றிய பிரகடனம் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2149/34 ஆம் இலக்க, 2019.11.17 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் பிரகடனம் செய்யப்பட்டது. அரசியலமைப்பின் 30(2) உறுப்புரைக்கமைய சனாதிபதியின் பதவிக்காலம் ஐந்து(5) ஆண்டுகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டதாகும்.

## 4. சனாதிபதி பதவி வறிதாதல்

நாட்டில் ஆரம்பமான மக்கள் போராட்டமொன்று காரணமாக அரசியலமைப்பின் 38(1) (ஆ) இற்கமைய பாராளுமன்ற சபாநாயகருக்கு

2022.07.16 ஆம் திகதி தான் அனுப்பிவைத்த ஒரு கடிதத்தின் மூலம் சனாதிபதி பதவி விலகினார். அவ்வாறு சனாதிபதி பதவி துறக்கும் போது குறித்த சனாதிபதியின் எஞ்சிய பதவிக் காலத்திற்கு அரசியலமைப்பின் 40(1)(அ) உறுப்புரைக்கமைய பாராளுமன்றம் கூடி பாராளுமன்ற உறுப்பினர்களிடையே சனாதிபதி பதவிக்கு தேர்ந்தெடுப்பதற்கு தகைமை பெற்றுள்ள பாராளுமன்ற உறுப்பினரொருவர் சனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## 5. பதில் சனாதிபதி

சனாதிபதி பதிவிக்கு அவ்வாறு பதிற்கடமையாற்றும் ஆளொருவர் பதவியை வறிதாக்கும் சனாதிபதியின் பதவிக் காலத்தின் எஞ்சிய காலப்பகுதிக்கு மாத்திரம் பதவி வகிக்க வேண்டுமென்று அரசியலமைப்பின் 40(1)(அ) இல் குறிப்பிடப்படுகிறது. பதில் சனாதிபதி ஒருவரைத் தேர்ந்தெடுப்பதற்கு 2022.07.20 ஆம் திகதி பாராளுமன்றம் கூடியது. ரணில் விக்ரமசிங்க, டளஸ் அலஹப்பெரும, அநுர குமார திசாநாயக்க ஆகிய பாராளுமன்ற உறுப்பினர்கள் அன்றைய தினம் நடைபெற்ற தேர்தலின் போது சனாதிபதி பதவிக்கு போட்டியிட்டனர். அதன்போது திரு. ரணில் விக்ரமசிங்க 134 வாக்குகளையும், திரு. டளஸ் அலஹப்பெரும 72 வாக்குகளையும், திரு. அநுர குமார திசாநாயக்க 03 வாக்குகளையும் பெற்றுக்கொண்டனர். 134 வாக்குகளைப் பெற்றுக்கொண்டு திரு. ரணில் விக்ரமசிங்க பதிலி சனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இத்தெரிவு குறித்த 2289/34 ஆம் இலக்க, 2022.07.20 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் பாராளுமன்ற செயலாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்டது.

## 6. பெயர் குறித்த நியமனம் கோரல்

உரிய பதவிக் காலம் முடிவடைய முந்திய ஒரு மாதத்திற்குக் குறையாத, இரண்டு மாதங்களுக்கு மேற்படாத ஒரு காலப்பகுதியினுள் சனாதிபதித் தேர்தல் வாக்கெடுப்பொன்று நடைபெற வேண்டுமென்று அரசியலமைப்பின் 31(3) உறுப்புரையில் குறித்துரைக்கப்பட்டுள்ளமையால், அரசியலமைப்பின் 104 ஆ உடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின் 2 ஆம் பிரிவின்படி தேர்தல் ஆணைக்குழுவுக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் சனாதிபதித் தேர்தலுக்கு தேர்தல் ஆணைக்குழுவினால் பெயர் குறித்து நியமிக்கும் திகதியாக 2024.08.15 ஆம் திகதியும், பெயர் குறித்த நியமனங்களை ஏற்கும் இடமாக தேர்தல் ஆணைக்குழுவின் தலைமை அலுவலகமும், வாக்கெடுப்பு நடைபெறும் திகதியாக 2024.09.21 ஆம் திகதியும் குறிப்பிடப்பட்டு 2394/51 ஆம் இலக்க 2024.07.26 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டது. இந்த சனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு வைப்புப்பணம் செலுத்திய வேட்பாளர்கள் பற்றிய விபரங்கள் வருமாறு:

| பெயர் குறித்து நியமித்த விதம் | வைப்புப்பணம் செலுத்திய வேட்பாளர்களின் எண்ணிக்கை | பெயர் குறித்த நியமனங்களை கையளித்த வேட்பாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| அங்கீகரிக்கபபட்ட அரசியல் கட்சிகளினால் | 22 | 22 |
| வேறு அரசியல் கட்சிகளினால் | 01 | 01 |
| தேருநரொருவர் முன்மொழிந்த | 17 | 16 |
| **மொத்தம்** | **40** | **39** |

அதன்படி, சனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு முப்பத்தொன்பது(39) வேட்பாளர்கள் முன்வந்திருந்தனர். அது பற்றிய விபரங்கள் வருமாறு:

| வாக்குச் சீட்டில் காட்டப்பட்டுள்ளவாறு வேட்பாளரின் பெயர் | சின்னம் |
|---|---|
| அக்மீமன தயாரத்ன தேரர் | கரும்பலகை |
| அபூபக்கர் முஹம்மது இன்பாஸ் | இரட்டை இலைகள் |
| சிறிபால அமரசிங்க | டயர் |
| அய்துரூஸ் மொஹம்மது இல்யாஸ் | ஊசிமருந்தேற்றல் குழாய் |
| கே.கே.பியதாஸ | கணிப்பான் |
| சரத் கீர்த்திரத்ன | கால்பந்து |
| கே.ஏ.குலரத்ன | பதக்கம் |
| கே.ஆர்.கிரிஷான் | நீர்க் குழாய் |
| பல்லிமுல்ல கப்புகமகே அநுர சிட்னி ஜயரத்ன | பலாப்பழம் |
| திலித் ஜயவீர | நட்சத்திரம் |
| சிறிதுங்க ஜயசூரிய | முச்சக்கர வண்டி |
| மயில்வாகனம் திலகராஜா | குருவிச் சிறகு |
| அகம்பொடி பிரசங்க சுரன்ஜீவ அனோஜ் த சில்வா | கழுகு |
| லலித் த சில்வா | வாழைப்பழச்சீப்பு |
| அஜந்த த சொயிசா | அன்னாசிப்பழம் |
| அநுர குமார திசாநாயக்க | திசைகாட்டி |
| மஹிந்த தேவகே | பலூன் |
| அரியநேத்திரன் பாக்கியசெல்வம் | சங்கு |
| விக்டர் பெரேரா | மோட்டார் சைக்கிள் |
| அநுருத்த பொல்கம்பல | குதிரை லாடம் |
| சஜித் பிரேமதாச | தொலைபேசி |
| சரத் பொன்சேக்கா | லாந்தர் |
| திசாநாயக்க முதியன்சேலாகே பண்டாரநாயக்க | மேசை மின்விசிறி |
| சரத் பண்டாரநாயக்க | தேங்காய் |
| பத்தரமுல்லே சீலரத்தன தேரர் | உழவு இயந்திரம் |
| நுவன் போப்பகே | குடை |
| சரத் மனமேந்திர | ஈட்டியும் அம்பும் |
| பேமசிறி மானகே | மூக்குக் கண்ணாடி |
| அநுருத்த ரொஷான் ரணசிங்க | கிரிக்கட் மட்டை |
| ஜனக்க ரத்நாயக்க | கோப்பை |
| நாமல் ராஜபக்ஷ | கடிதவுறை |
| நாமல் ராஜபக்ஷ | மலர் மொட்டு |
| விஜயதாச ராஜபக்ஷ | மோட்டார் கார் |
| ஏ.எஸ்.பீ.லியனகே | கங்காரு |
| கீர்த்தி விக்ரமரத்ன | கொடி |
| பிரியந்த விக்ரமசிங்க | மேசை |
| ரணில் விக்ரமசிங்க | எரிவாயு சிலிண்டர் |
| பானி விஜேசிறிவர்தன | கத்தரிக்கோல் |
| ஓஷல ஹேரத் | உண்டியல் |

இந்த வேட்பாளர்கள் மத்தியில் சனாதிபதி பதவி வேட்பாளர் அய்துரூஸ் மொஹம்மது இல்யாஸ் அவர்கள் 2024.08.22 ஆம் திகதி மரணித்ததுடன், சட்டத்திற்கமைய அவர் சார்பாக வேறு வேட்பாளரொருவரை பெயர் குறித்து நியமிக்குமாறு அவரது பெயர் குறித்த நியமனத்தைச் செய்த தேருநருக்கு தேர்தல் ஆணைக்குழுவினால் எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டிருந்தபோதும் அது புறக்கணிக்கப்பட்டிருந்தது. அதன்படி, இந்த சனாதிபதித் தேர்தலில் சனாதிபதி பதவிக்கான வேட்பாளர்களின் எண்ணிக்கை 38 ஆக இருந்தது.

## 7. அஞ்சல் வாக்கெடுப்பு

இந்த சனாதிபதித் தேர்தலுக்கு சட்டத்தின் 23 ஆம் பிரிவுப்படி அஞ்சல் வாக்களிப்பதற்காக

கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கை : 736,589
அங்கீகரிக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை : 712,319
நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை : 24,268 ஆக இருந்தது.

***அஞ்சல் வாக்கு விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தலும் அது தொடர்பில் வழங்கப்பட்ட வசதிகளும் பற்றி இச்சஞ்சிகையிலுள்ள பாராளுமன்றத் தேர்தல் தொடர்பான கட்டுரையில் 7 ஆம், 8 ஆம் பக்கங்களில் காணலாம். அதில் குறிப்பிடப்பட்ட செயன்முறை சனாதிபதித் தேர்தலின் போதும் பின்பற்றப்பட்டது.***

2019 ஆம் ஆண்டில் நடைபெற்ற சனாதிபதித் தேர்தலுடன் ஒப்பிடும்போது அஞ்சல் வாக்கு விண்ணப்பங்களின் எண்ணிக்கை 2.23% இனால் அதிகரித்துள்ளது.

அஞ்சல் வாக்குச் சீட்டுக்கள் அடங்கிய காப்புறுதிப் பக்கற்றுக்கள் 2024.08.26 ஆம் திகதி அஞ்சலிடுவதற்காக ஒப்படைக்கப்பட்டன. அதேபோல், அஞ்சல் வாக்கு அடையாளமிடல் பின்வரும் தினங்களில் இடம்பெற்றது:

**2024.09.04**

மாவட்ட செயலகங்களிலும் தேர்தல் ஆணைக்குழு அலுவலகங்களிலும் பொலிஸ் நிலையங்களிலும்

**2024.09.05 - 2024.09.06**

அரச நிறுவனங்களிலும் முப்படை முகாம்களிலும்

**2024.09.11 - 2024.09.12**

மேற்கூறிய தினங்களில் அஞ்சல் வாக்கு அடையாளமிட முடியாதிருந்த அஞ்சல் வாக்காளர்களுக்கு தொழில்புரியும் இடம் அமைந்துள்ள மாவட்டத்தின் மாவட்ட தேர்தல்கள் அலுவலகங்களில்

## 8. தேருநர் இடாப்புக்களும் வாக்கெடுப்பு நிலையங்களும்

இந்த சனாதிபதித் தேர்தலுக்கு 2024.07.01 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்திய 2024 பிரதான தேருநர் இடாப்பும்,2024.07.08 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்திய 2024 –1 ஆவது குறைநிரப்பு இடாப்பும் பயன்படுத்தப்பட்டது'

## 9. இயலாமைக்குட்பட்ட தேருநரொருவருக்கு வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்குச் சீட்டை அடையாளமிடுவதற்காக உதவியாளர் ஒருவரை உடனழைத்துச் செல்வதற்குத் தேவையான சட்ட ஏற்பாடுகளை மேற்கொள்ளல்

2011 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க தேர்தல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின் 38(2) ஆம் பிரிவிற்கிணங்க எதிர்வரும் தேர்தல்களின் போது பூரண அல்லது பகுதியளவு விழிப்புலனற்ற நிலைக்கு அல்லது யாதேனும் உடலியல் இயலாமையொன்றுக்கு உட்பட்ட தேருநரொருவருக்கு வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்குச் சீட்டை அடையாளமிடுவதற்கு உதவியாளரொருவரை உடனழைத்துச் செல்வதற்கு ஏற்ற விதத்தில் சட்ட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## 10. உடலியல் இயலாமைக்குட்பட்ட ஆட்கள் விசேட போக்குவரத்து வசதிகளுக்காக விண்ணப்பம் செய்தல்

1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின் 82(4)(ஈ) பந்தியின்படி, யாதேனும் உடலியல் இயலாமையொன்று காரணமாக யாதேனுமொருவருக்கு கால்நடையாக அல்லது வேறு பொதுப் போக்குவரத்துச் சேவையொன்றின் மூலம் வாக்கெடுப்பு நிலையத்திற்குச் சென்று வர முடியாத நிலையிருப்பின், வாக்கெடுப்பு நிலையத்திற்குச் சென்று வருவதற்கு வாகனமொன்றின் மூலம் போக்குவரத்து வசதியைப் பெற்றுக்கொள்வதற்கு தமது வாக்கெடுப்புப் பிரதேசத்தின் தெரிவத்தாட்சி அலுவலருக்கு தானே அல்லது அன்றேல் தான் சார்பாக வேட்பாளரொருவர், வாக்கெடுப்பு முகவரொருவர், அதிகாரம்பெற்ற முகவரொருவர், பெரும்பாக முகவரொருவர் அல்லாத வேறொருவர் விண்ணப்பமொன்றைச் செய்யலாம். மேலே இல. 9, இல. 10 இல் குறிப்பிடப்பட்டுள்ள வசதிகள் பற்றி உரியவாறு சுற்றறிக்கைகள், பத்திரிகை விளம்பரங்கள், ஊடக அறிவித்தல்கள், ஊடக கலந்துரையாடல்கள் என்பவற்றின் ஊடாக பொதுமக்களை அறிவுறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

## 11. பணிப்புகளும் வழிகாட்டிநெறிகளும் ஒழுக்கநெறிகளும்

இந்த சனாதிபதித் தேர்தலின் போது அனைத்து நியதிச்சட்ட பணிகளும் குறித்து அதாவது வாக்கெடுப்பு நிலைய நடவடிக்கைகள், அஞ்சல் வாக்கெடுப்புச் செயன்முறை, வாக்கெண்ணும் பணிகளும் அத்தகைய சந்தர்ப்பங்களுக்கான கண்காணிப்பு நடவடிக்கைகளில் முகவர்களை ஈடுபடுத்தல், பிரச்சார நடவடிக்கைகளில் அறிவித்தல் கொடுக்கப்பட்ட அலுவலகங்களை நிறுவுதல் சம்பந்தமாக அரசியல் கட்சிகளின் செயலாளர்கள், வேட்பாளர்கள், முகவர்கள், கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடும் கண்காணிப்பு அமைப்புகளின் பிரதிநிதிகளை பல்வேறு சந்தர்ப்பங்களிலும் அறிவுறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

அரசியலமைப்பின் 104ஆ(4)(அ) உறுப்புரைக்கிணங்க தேர்தல் காலப்பகுதியினுள் அரச வளங்கள் துஷ்பிரயோகம் செய்யப்படுவதைத் தடுக்கும் பொருட்டு 2394/56 ஆம் இலக்க, 2024.07.26 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டு அது பற்றி அனைத்து அமைச்சரவை மற்றும் இராஜாங்க அமைச்சுக்களின் செயலாளர்கள், மாகாண பிரதம செயலாளர்கள் உள்ளிட்ட அரச வளங்களுக்குப் பொறுப்பாக செயலாற்றும் அனைத்து அரச மற்றும் நியதிச்சட்ட சபைகளின் தலைவர்களை அழைத்து அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டது.

சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல்களுக்காக அரசியலமைப்பின் 104ஆ(5)(அ) இற்கிணங்க தேர்தல் ஆணைக்குழுவுக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு ஊடக வழிகாட்டிநெறிகள் அடங்கிய 2394/57 ஆம் இலக்க, 2024.07.26 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டு ஊடக பாவனை சம்பந்தமாக வெகுசன ஊடக அமைச்சின் செயலாளர், அரச தகவல் பணிப்பாளர் நாயகம், தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் உள்ளிட்ட அரச மற்றும் தனியார் ஊடக நிறுவனங்களின் தலைவர்கள், செய்தி ஆசிரியர்கள், பிரதம ஆசிரியர்கள், ஊடகவியலாளர்களும் ஊடக வழிகாட்டிநெறிகளை செயல்வலுவூட்டுதலும் அதற்கு இயைய செயலாற்றுவதும் குறித்தும் தேர்தல் செயன்முறை குறித்தும் தலைமை அலுவலகத்திலும் மாவட்ட மட்டத்திலும் விளக்கமளித்து அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்தன.

தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் பின்பற்றி ஒழுக வேண்டிய

ஒழுக்கநெறிகள் அடங்கிய 2294/58 ஆம் இலக்க, 2024.07.26 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டிருந்தது. அது தொடர்பாக அனைத்து கட்சிகளை/வேட்பாளர்களை அறிவுறுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

## 12. சட்ட வினைப்படுத்தல்

தேர்தல் சட்ட வினைப்படுத்தலுக்கும் தேர்தல் சட்ட மீறல்கள், தவறுகள், சட்டவிரோத மற்றும் ஊழல் நடத்தைகள் சம்பந்தமாக கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளை ஏற்பதற்கும் அவை தொடர்பாக செயலாற்றுவதற்கும் பெயர் குறித்த நியமன அறிவித்தலை வெளியிட்ட தினத்திலிருந்து தேர்தல் முடிவடைந்து முடிவுகள் வெளியிடப்பட்ட திகதி வரை தேர்தல்கள் செயலகத்திலும் அனைத்து தெரிவத்தாட்சி அலுவலர் அலுவலகங்களிலும் தேர்தல் பிணக்குத் தீர்வு அலகுகள் நிறுவப்பட்டிருந்தன. இந்த அலகுகளின் கடமை அலுவல்களுக்கு உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களின் தலைமையில் சிவில் அலுவலர்களும் பொலிஸ் பரிசோதகரொருவரின் தலைமையில் பொலிஸ் அலுவலர் குழுவொன்றும் இணைக்கப்பட்டிருந்தது.

தேர்தல் குற்றங்கள், ஊழல் மற்றும் சட்டவிரோத செயற்பாடுகள், ஊடக மற்றும் சமூக ஊடகங்கள் ஊடாகவும் ஏற்படும் சட்ட மீறல்கள் பற்றி கிடைக்கும் முறைப்பாடுகளை தாமதமின்றி ஆராய்ந்து துரிதமாக செயலாற்றுவதும் வேளைக்கேற்றவாறு உரிய திறத்தவர்களை ஆணைக்குழுவுக்கு அழைத்து அறிவுறுத்தல்களை வழங்கி அவ்வாறான நடவடிக்கைகளை இடைநிறுத்துவதற்கும் செயலாற்றப்பட்டிருந்தது. சமூக ஊடகங்கள் வாயிலாக மேற்கொள்ளப்படும் சட்டவிரோத பிரச்சார நடவடிக்கைகள் சம்பந்தமாக ஆராய்வதற்கும், முறைப்பாடுகள் தொடர்பில் செயலாற்றுவதற்கும் தேர்தல் ஆணைக்குழுவின் தலைமை அலுவலகத்தில் விசேட அலகொன்று நிறுவப்பட்டிருந்தது.

இத்தேர்தலின்போது தேர்தல் ஆணைக்குழுவும் இலங்கை பொலிஸாரும் இணைந்து தேர்தல் சட்டங்களை வலுவுக்கிடுவதற்கு உரிய திறத்தவர்களை அறிவுறுத்தல், ஆலோசனைகளை வழங்குதல் பரவலாக இடம்பெற்றது. அதன் பயனாக தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளும் சட்டரீதியாக இடம்பெற்றன. அதன் காரணமாக தேர்தலில் போட்டியிடும் அனைத்துத் திறத்தவர்களுக்கும் இடையில் பிணக்குகள் ஏற்படும் நிலை குறைவடைந்தது. நியதிச்சட்டப் பணிகளையும் சிறப்பாக ஒழுங்குபடுத்தி அமுல்படுத்துவது மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்கள், பிரதி/உதவி தேர்தல்கள் ஆணையாளர்கள் செயலாற்றியதன் காரணமாக தேர்தல் சுதந்திரமாகவும் நீதியாகவும் இடம்பெற்றதாக அனைத்துத் திறத்தவர்களும் ஏற்றுக்கொண்டனர். **தேர்தல் பிணக்கு முகாமைத்துவம் பற்றிய முழுமையான ஓர் அறிக்கை இச்சஞ்சிகையின் பிறிதோரிடத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.**

## 13. வானலை காலங்களை ஒதுக்கிக்கொள்ளல், ஊடக அறிவித்தல்கள் மற்றும் ஊடக ஒருங்கிணைப்பு

இத்தேர்தல் சார்பாக சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு வேட்பாளர்களுக்கு தமது கொள்கைகளை மக்கள் முன்வைப்பதற்கு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனமும் இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனமும் தேர்தல் ஆணைக்குழுவின் உதவியுடன் இலவசமாக வானலை காலங்களை ஒதுக்குவதற்கு செயலாற்றின. வானலை காலத்தின் அடிப்படையில் உரையாற்றும்போது ஏற்புடைத்தாக்கிக்கொள்ள வேண்டிய நிபந்தனைகளை விதிப்பதற்கும் செயலாற்றப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இந்த வசதிகளை அனைத்து வேட்பாளர்களும் முழுமையாகப் பெற்றுக்கொண்டிருக்கவில்லை. அரசாங்க தகவல் திணைக்களத்தினாலும் வேட்பாளர்களுக்கு தமது கொள்கைகளை பொதுமக்கள் முன்வைப்பதற்கு 01 மணித்தியால வானலை காலமொன்று ஒதுக்கிக்கொடுக்கப்பட்டிருந்தது. தேர்தல் சார்ந்த உத்தியோகபூர்வ நியதிச்சட்ட பணிகள் சம்பந்தமாக ஊடகங்களை அறிவுறுத்தல், ஊடக கலந்துரையாடல்களை நடாத்துவதற்கு மேலதிகமாக 06 பத்திரிகை விளம்பரங்களை 109 ஊடக அறிவித்தல்களையும் மும்மொழிகளிலும் வெளியிட்டு மக்களை அறிவுறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அரசாங்கத் தகவல் திணைக்களமும் ஊடக கலந்துரையாடல்களை நடத்துவதற்கு நேரடி பங்களிப்பை வழங்கியிருந்தது.

இலங்கை தேர்தல் வரலாற்றில் முதல் தடவையாக தேர்தல் ஆணைக்குழுவின் ஊடக அலகினால் தேர்தல் தின உத்தியோகபூர்வ சமூக ஊடக மேடைகள் ஊடாக நேரலை ஒலிபரப்பொன்று நடைபெற்றது. இந்த ஒலிப்பரப்பில் தேர்தல்கள் திணைக்களம் மற்றும் தேர்தல் ஆணைக்குழுக்களின் வரலாறு, தேர்தல்கள் செயன்முறை, நியதிச்சட்ட பணிகள், சட்ட வினைப்படுத்தல், தகவல் தொழில்நுட்ப முறைமைகள் முதலியன குறித்து ஆணைக்குழுவின் தவிசாளர் உள்ளிட்ட அதன் உறுப்பினர்கள், சிரேட்ட அதிகாரிகளுடன் நடைபெற்ற நேர்காணல்களும் அத்தியாவசியமான உத்தியோகபர்வ அறிவித்தல்களும் நேரலை ஒலிபரப்பொன்றும் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் முன்பு காணப்பட்ட நிலைமையுடன் ஒப்பிடும்போது ஆணைக்குழுவின் உத்தியோபூர்வ சமூக ஊடக மேடைகளின் பயனர்களின் எண்ணிக்கை அதிகரித்தது. அதேபோல் அதற்கு உயர் வரவேற்பொன்றும் ஏற்பட்டிருந்தது. தேர்தல்கள் முறைகளுக்கான சர்வதேச நிறுவகம் (IFES) இதற்கு நிதி அனுசரணை வழங்கியது.

## 14. தேர்தல் காலம்

போட்டியிட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை அதிகரித்தபோதும், வாக்குச் சீட்டின் நீளம் அதிகரித்தபோதும், கடந்த அனுபவங்களின்படி வாக்களிப்பதற்கான நேரம் நீடிக்கப்படவில்லை. மு.ப. 7.00 மணி முதல் பி.ப. 4.00 மணி வாக்கெடுப்பு நிலையத்தில் வரிசையில் காத்திருக்கும் அனைவருக்கும் வாக்களிப்பதற்கு சந்தர்ப்பமளிக்கப்பட்டது அதிகாலையில் உரிய வாக்கெடுப்பு நிலையத்திற்குச் சென்று வாக்களிக்குமாறு தேர்தல் ஆணைக்குழு பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்தது.

சனாதிபதித் தேர்தல் வாக்கெடுப்பின்போது சரியான முறையில் வாக்களிக்கும் விதம் பற்றி வெகுசன ஊடகங்கள் வாயிலாக பிரசைகள் அறிவுறுத்தப்பட்டனர். அது பற்றி பரந்ததொரு பிரச்சாரமும் மேற்கொள்ளப்பட்டது

## 15. வாக்குச் சீட்டுப் பெட்டிகள்

தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை 39 வரை அதிகரித்ததன் காரணமாக வாக்குச் சீட்டின் நீளம் 27 அங்குலம் வரை நீண்டது. ஒவ்வொரு வாக்கெடுப்பு நிலையத்திற்கும் உரிய வாக்குகளின் எண்ணிக்கையும் அதிகரித்தது. இதன் காரணமாக ஒரு வாக்குச் சீட்டுப் பெட்டியில் இடக்கூடிய வாக்குகளின் எண்ணிக்கை வரையறுக்கப்பட்டதன் அடிப்படையில் இத்தேர்தலுக்கும் கடந்த தடவைகளைப் போல் மூன்று மடங்கினால் பின்வருமாறு தடித்த காகித அட்டைப் பெட்டிகள்

பாவிக்கப்பட்டன.

**1200 வாக்குகளுக்குக் குறைவான நிலையங்களுக்கு**
16 ½ x 13 x 22 - 2275 (சிறிய)

**1200-2400 வாக்குகளைக் கொண்ட நிலையங்களுக்கு**
21 x 14 ½ x 23 - 8475 (நடுத்தர)

**2400 வாக்குகளுக்கு மேற்பட்ட நிலையங்களுக்கு**
24 x 17 x 26 - 3500 (பெரிய)

## 16. கண்காணிப்பு நடவடிக்கைகள்

தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகளில் 10 உள்நாட்டு கண்காணிப்பு நிறுவனங்கள் பங்கேற்றன. இந்த நிறுவனங்களில் தேர்தல் வன்முறைகள் கண்காணிப்பு நிலையம் (CMEV) சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல்களுக்கான மக்கள் செயற்பாடு (PAFFREL) ஆகிய அமைப்புகளுக்கு வாக்கெடுப்பு நிலையத்திற்கு உள்ளிருந்து கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டிருந்தது. கண்காணிப்புப் பணியில் ஈடுபடும் முகவர்களுக்கான அறிவுறுத்தல் கோவையொன்றும் வெளியிடப்பட்டது. தேர்தல் ஆணைக்குழுவின் அழைப்பின் பேரில் வாக்கெடுப்பு நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்காக தெற்காசிய தேர்தல் அதிகாரிகள் ஒழுங்கமைப்பின் பிரதிநிதிகளைக் கொண்ட கண்காணிப்புக் குழுவொன்று கலந்துகொண்டது. இது தவிர, ஆணைக்குழுவின் சிபார்சின் பேரில் ஐரோப்பிய ஒன்றியத்தினதும் அன்ஃபிரல் ஒழுங்கமைப்பினதும் பிரதிநிதிகளும் அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கும் விதத்தில் தேர்தல் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டனர். இத்தேர்தல் நடவடிக்கைகள் சுதந்திரமானதும் நீதியானதுமான விதத்தில் நடைபெற்றதாக அவர்களின் பின்னைய கண்காணிப்பு அறிக்கைகள் குறிப்பிடுகின்றன.

## 17. வாக்கெண்ணலும் முடிவுகளை வெளியிடுதலும்

சனாதிபதித் தேர்தல் வாக்கெண்ணல் பணி தேர்தல் மாவட்ட வாரியாக இடம்பெற்றது. அதன்படி, மொத்தம் 49 வாக்கெண்ணும் வளவுகள் காணப்பட்டன. 1713 வாக்கெண்ணும் மண்டபங்கள் காணப்பட்டன. ஒவ்வொரு தேர்தல் மாவட்ட வாரியாக அஞ்சல் வாக்கு முடிவுகளையும் வாக்கெடுப்புப் பிரிவு வாரியாகவும் தேர்தல் மாவட்ட வாரியாகவும் பொதுவான வாக்குச் சீட்டுக்கள் எண்ணப்பட்டு முடிவுகளைத் தயாரிக்கும் நிலையங்களில் முடிவுகளை கையினால் தயாரித்து கணினி முறைமையொன்றின் துணையுடன் தயாரித்து தலைமை அலுவலகத்திற்கு பெக்ஸ் மூலமும் இ-சேவைகள் ஊடாகவும் முடிவுகளின் ஆவணங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டன. தலைமை அலுவலகத்தில் அத்தகைய முடிவு ஆவணங்கள் மீண்டும் கையினால் தயாரித்து கணினிச் செய்நிரலின் துணையுடன் தயாரித்து சோதித்த பின்பு தவிசாளரின் கையொப்பத்துடன் உத்தியோகபூர்வ முடிவுகளை வெளியிடப்பட்டு, மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு அனுப்பப்பட்டு, ஊடகங்களுக்கும் வழங்கப்படுகிறது. மாவட்டங்களிலும் தலைமை அலுவலகத்திலும் முடிவுகளை கையினால் தயாரிக்கும் பணி சிரேட்ட அரச அதிகாரிகளின் மேற்பார்வையின் கீழும், கணினிச் செய்நிரல் தேர்தல் ஆணைக்குழுவின் தகவல் தொழில்நுட்பப் பிரிவு அலுவலர்களின் தலைமையிலும் கொழும்புப் பல்கலைக்கழக கணினிப் பாடசாலை, பசுமைப் பல்கலைக்கழகம் மற்றும் தகவல் தொழில்நுட்ப முகவராண்மையின் நிபுணர்களைக் கொண்ட குழுவொன்றினாலும் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## 18. தேர்தல் செலவினத்தை ஒழுங்குபடுத்துதல்

அரசியல் கட்சிகளின்/வேட்பாளர்களின் தேர்தல் பிரச்சார செலவினத்தை ஒழுங்குபடுத்தும் பொருட்டு நிறைவேற்றப்பட்ட 2023 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க தேர்தல் செலவினத்தை ஒழுங்குபடுத்துதல் சட்டம் இந்த சனாதிபதித் தேர்தல் வாக்கெடுப்பின் போது முழுமையாக அமுலுக்கிடப்பட்டது. அதன்படி, போட்டியிட்ட வேட்பாளர்களையும் வாக்கெடுப்பு முகவர்களையும் தேர்தல் ஆணைக்குழுவுக்கு அழைத்து கலந்துரையாடி பின்பு தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்காக செலவிடக்கூடிய ஆகக் குறைந்த தொகையை நிர்ணயித்து 2397ஃ66 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலொன்றின் மூலம் பகிரங்கப்படுத்தப்பட்டது. அந்த அடிப்படையில்,

| விபரம் | செலவின எல்லை (ரூ) |
|---|---|
| 2024 சனாதிபதித் தேர்தலுக்கு போட்டியிடும் வேட்பாளருக்கு செலவிடக்கூடிய தொகை (60%) | 1,120,979,151.60 |
| 2024 சனாதிபதித் தேர்தலுக்கு வேட்பாளரொருவரை தோற்றச்செய்த அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிக்கு அல்லது வேறு அரசியல் கட்சிக்கு அல்லது தேருநருக்கு செலவிடக்கூடிய தொகை (40%) | 747,319,434.40 |
| மொத்தம் | 1,868,298,586.00 |

தேர்தல் இறுதியில் செலவினத்தை ஒழுங்குபடுத்துதல் சட்டத்தில் குறிப்பிடப்பட்டவாறு மூன்று வேட்பாளர்கள் தவிர முப்பத்தைந்து பேர் தமது வருமான செலவின விபரத்திரட்டுக்களை தேர்தல் ஆணைக்குழுவுக்கு ஒப்படைத்திருந்ததுடன், வருமான செலவின விபரத்திரட்டுக்களை ஒப்படைக்காத வேட்பாளர்கள்/ கட்சிகள் தொடர்பில் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்டவாறு சட்டத்தின் மூலம் நடவடிக்கை எடுப்பதற்காக இலங்கை பொலிசாருக்கு அறிக்கையிடப்பட்டிருந்தது.

## 19. நீதிமன்ற நடவடிக்கைகள்

இந்த சனாதிபதி தேர்தல் நடத்துதல் காரணமாக அடிப்படை உரிமை மீறல்கள் சம்பந்தமாக தாக்கல் செய்யப்பட்ட SC/FRA/177/2024, SC/FRA/191/2024 வழக்குகள் விசாரித்து முடிந்து வழக்கு தீர்வுகள் வழங்கப்பட்டுள்ளன.

## 20. சனாதிபதித் தேர்தல் முடிவுகள்

இம்முறை நடைபெற்ற சனாதிபதித் தேர்தல் வாக்கெடுப்பின் போது,

பதிவுசெய்யப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை :17,140,354
அளிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை :13,619,916 (79.46%)
நிராகரிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை :300,300 (2.2%)
செல்லுபடியான வாக்குகளின் எண்ணிக்கை :13,319,616(97.8%) ஆகும்.

**5,634,915 (42.31%)** வாக்குகளைப் பெற்றுக் கொண்ட தேசிய மக்கள் சக்தி கட்சியின் திரு. அநுர குமார திசாநாயக்க சனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டதாக 2402/26 ஆம் இலக்க, 2024.09.22 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் தேர்தல் ஆணைக்குழு வெளியிட்டது. **(முழுமையான தேர்தல் முடிவுகளை தேர்தல் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் (www.elections.gov.lk) காணலாம்.)**

**துணைநூற்பட்டியல்:**


1. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு
2. 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சனாதிபதித் தேர்தல்கள் சட்டம்.
3. 2023 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க தேர்தல் செலவினத்தை ஒழுங்குபடுத்துதல் சட்டம்.
4. 'புள்ளடியின் பலம்' சஞ்சிகை – வெளியீடு: தேர்தல் ஆணைக்குழு – மலர் 3 இதழ் 2–3, 2019/ மலர் 8 இதழ் 2 – 2024
5. தேர்தல் தொடர்பாக தேர்தல் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல்கள், சுற்றறிக்கைகள், அறிவுறுத்தல்கள், ஊடக அறிவித்தல்கள்.



# பாராளுமன்றத் தேர்தல் 2024

கே. சத்துரி தில்ஹாணி சேரசுந்தர பிரதிப் பணிப்பாளர் (திட்டமிடல்)
தேர்தல் ஆணைக்குழு

## 01. அறிமுகம்

1981 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின்படி இலங்கைப் பாராளுமன்றத்தின் பதவிக் காலம் 05 ஆண்டுகளாக இருந்த போதிலும், அதன் கன்னிக் கூட்டத்திலிருந்து 02 ஆண்டுகளும் 06 மாதங்களும் கழிந்து அல்லது பாராளுமன்றத்திலிருந்து பிரேரணையொன்று கிடைத்த பின் சனாதிபதி அதனைக் கலைக்கலாம். அதன்படி, இலங்கைப் பாராளுமன்றத்தின் பதவிக் காலம் 2025 ஆகஸ்ட் மாதத்தில் முடிவடைய இருந்த நிலையிலும் கௌரவ சனாதிபதி அனுர குமார திசாநாயக்க அவர்கள் அரசியலமைப்பின் 70 ஆவது உறுப்புரையினால் அவருக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் வண்ணமும் 1981 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் ஏற்பாடுகளைப் பின்பற்றியும் 2024 செப்தெம்பர் மாதம் 24 ஆம் திகதி நள்ளிரவு முதல் செயல்வலுப்பெறுமாறு பாராளுமன்றம் கலைக்கப்பட்டது. அதன்படி, 2024 நவம்பர் மாதம் 21 ஆம் திகதி புதிய பாராளுமன்ற கூட்டத்திற்கு அழைப்பதாகவும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 10 ஆவது பாராளுமன்றத்திற்கு 225 உறுப்பினர்களை தெரிந்தனுப்புவதற்கான பாராளுமன்றத் தேர்தலை 2024 நவம்பர் மாதம் 14 ஆம் திகதி நடத்துவதற்கு நாள் குறித்தும், அதற்காக 2024 அக்டோபர் மாதம் 04 ஆம் திகதி முதல் 11 ஆம் திகதி நண்பகல் 12 மணி வரை 22 தேர்தல் மாவட்டங்களுக்கு தெரிவத்தாட்சி அலுவலர்களினால் பெயர் குறித்த நியமனங்களைக் கோர நாள்குறித்து 2403/13 ஆம் இலக்க 2024.09.24 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது.

## 02. தேர்தல் சட்டம்

1978 அரசியலமைப்பு, 1981 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டம், 2023 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க தேர்தல் செலவினத்தை ஒழுங்குபடுத்துதல் சட்டம், 2023 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க தேர்தல் விசேட ஏற்பாடுகள் சட்டம் ஆகியவற்றின் மூலம் இப்பாராளுமன்றத் தேர்தலுக்குரிய சட்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

## 03. தேருநர் இடாப்பு மற்றும் தேர்தல் மாவட்ட வாரியாக தெரிந்தனுப்பப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை

1978 அரசியலமைப்பினால் இந்நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்ட விகிதாசார பிரதிநிதித்துவ முறையின் கீழ் இலங்கை 22 தேர்தல் மாவட்டங்களாக பிரிக்கப்பட்டது. அதில் முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களை இணைத்து வன்னி தேர்தல் மாவட்டமும் கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களை இணைத்து யாழ்ப்பாண தேர்தல் மாவட்டமும் பெயரிடப்பட்டது. இவ்வாறாக இந்நாட்டு பாராளுமன்றத்துக்கு பொது மக்களின் வாக்குகளினால் 196 உறுப்பினர்களும் 99(அ) உறுப்புரையின்படி (தேசியப் பட்டியல்) 29 உறுப்பினர்களும் என்ற இரு விதங்களில் 225 உறுப்பினர்கள் தெரிந்தனுப்பப்படுகின்றனர். இங்கு அரசியலமைப்பின் 98(8) உறுப்புரையின்படி ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திலிருந்தும் நியமிக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கையை நிர்ணயிக்கும் பணி தேர்தல் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படுகிறது. அதன்படி, 22 மாவட்டங்களுக்கு அரசியல் கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களும் பெற்றுக்கொண்ட வாக்குகளின் அடிப்படையில் 196 உறுப்பினர்கள் பாராளுமன்றத்துக்கு தெரிவுசெய்யப்படுகின்றனர். அரசியலமைப்பிற்கான 15 ஆம் திருத்தத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட 99(அ) உறுப்புரையின் கீழ் குறித்த அரசியல் கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களும் தேசிய மட்டத்தில் பெற்றுக்கொண்ட மொத்த வாக்குகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் 29 உறுப்பினர்கள் (தேசியப் பட்டியல்) நியமிக்கப்படுகின்றனர்.

1981 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 04 ஆம் பிரிவிற்கமைய தேர்தலொன்றை நடாத்துமாறு பணிக்கும் பிரகடனமொன்று செய்யப்படும் நாளில் நடைமுறையிலிருந்த தேருநர் இடாப்பு குறித்த தேர்தலுக்கு செல்லுபடியானது என்பதால், இப் பாராளுமன்றத் தேர்தல் நடைபெறுகின்றது என்ற பிரகடனம் வெளியான 2024.09.24 ஆம் திகதியளவில் செல்லுபடியானதாகவிருந்த, 2024.07.01ஆம் திகதி அத்தாட்சிப்படுத்திய 2024 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பு இதற்காக உபயோகிக்கப்பட்டது. அதன்படி, இப்பாராளுமன்றத் தேர்தலுக்கு தேருநர் இடாப்பின்படி 17,140,354 வாக்காளர்கள் தம்மைப் பதிவு செய்துகொண்டுள்ளனர்.

அரசியலமைப்பின் 98(8) ஆம் உறுப்புரையின்படி தேர்தல் மாவட்ட வாரியாக நியமிக்கப்படவுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை, தேர்தல் ஆணைக்குழுவினால் 2393/26 ஆம் இலக்க 2024.07.17 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானியின் மூலம் வெளியிடப்பட்டது.

## 04. நியமனப்பத்திரங்களைக் கையேற்றல்

1981 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 10 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பாராளுமன்றத்தைக்

கலைப்பதாக சனாதிபதியினால் 2024.09.24 ஆம் திகதி செய்யப்பட்ட பிரகடனம் அடங்கிய 2403/13 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் மூலம் இப்பாராளுமன்றத் தேர்தலுக்கு பெயர் குறித்த நியமனப் பத்திரங்களை கையேற்றல் 2024 அக்டோபர் மாதம் 04 ஆம் திகதி முதல் 11 ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை அனைத்து தெரிவத்தாட்சி அலுவலர் அலுவலகங்களிலும் மேற்கொள்ளப்பட்டது. இம்முறை பாராளுமன்றத் தேர்தலுக்கு 22 தேர்தல் மாவட்டங்கள் சார்பாக அரசியல் கட்சிகளினால் 470 பெயர்குறித்த நியமனப்பத்திரங்களும் சுயேட்சைக்குழுக்களினால் 318 பெயர் குறித்த நியமனப் பத்திரங்களும் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. அவற்றில் அரசியல் கட்சிகளுக்கு உரிய 432 நியமனப் பத்திரங்களும் சுயேச்சைக் குழுக்கள் சமர்ப்பித்த 284 நியமனப்பத்திரங்களும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. அவற்றில் அடங்கியிருந்த மொத்த வேட்பாளர்களின் எண்ணிக்கை 8,821 ஆகும். 469 வேட்பாளர்கள் அடங்கிய தேசியப் பட்டியலொன்றும் காணப்பட்டது. மாவட்ட வாரியான பெயர் குறித்த நியமனங்களின் பட்டியலை குறிப்பு 01 இல் காணலாம்.

| தேர்தல் மாவட்டத்தின் பெயர் | நியமனப்பத்திரங்களைக் கையளித்த | | அங்கீகரிக்கபட்ட மொத்த நியமனப் பத்திரங்களின் எண்ணிக்கை | மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை | | தெரிந்து அனுப்பப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| | அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் | சுயேச்சைக் குழு | | அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் | சுயேச்சைக் குழு | |
| கொழும்பு | 27 | 19 | 46 | 567 | 399 | 18 |
| கம்பஹா | 24 | 17 | 41 | 528 | 374 | 19 |
| களுத்துறை | 17 | 11 | 28 | 238 | 154 | 11 |
| கண்டி | 22 | 12 | 34 | 330 | 180 | 12 |
| மாத்தளை | 16 | 07 | 23 | 128 | 56 | 05 |
| நுவரெலியா | 17 | 11 | 28 | 187 | 121 | 08 |
| காலி | 17 | 05 | 22 | 204 | 60 | 09 |
| மாத்தறை | 15 | 07 | 22 | 150 | 70 | 07 |
| அம்பாந்தோட்டை | 16 | 09 | 25 | 160 | 90 | 07 |
| யாழ்ப்பாணம் | 23 | 21 | 44 | 207 | 189 | 06 |
| வன்னி | 23 | 25 | 48 | 207 | 225 | 06 |
| மட்டக்களப்பு | 22 | 27 | 49 | 176 | 216 | 05 |
| திகாமடுல்ல | 21 | 43 | 64 | 210 | 430 | 07 |
| திருகோணமலை | 17 | 14 | 31 | 119 | 98 | 04 |
| குருணாகல் | 18 | 09 | 27 | 324 | 162 | 15 |
| புத்தளம் | 24 | 15 | 39 | 264 | 165 | 08 |
| அநுராதபுரம் | 17 | 09 | 26 | 204 | 108 | 09 |
| பொலன்னறுவை | 13 | 02 | 15 | 104 | 16 | 05 |
| பதுளை | 15 | 05 | 20 | 180 | 60 | 09 |
| மொணராகலை | 12 | 03 | 15 | 108 | 27 | 06 |
| இரத்தினபுரி | 18 | 07 | 25 | 252 | 98 | 11 |
| கேகாலை | 14 | 04 | 18 | 168 | 48 | 09 |
| **மொத்தம்** | **408** | **282** | **690** | **5015** | **3346** | |
| **தேசியப் பட்டியல்** | **27** | **02** | **29** | **516** | **11** | |
| **முழு மொத்தம்** | **435** | **284** | **719** | **5531** | **3357** | **196** |

பைலம 1

பெயர் குறித்த நியமனங்களைக் கையேற்ற பின்னர் தேர்தல் ஆணைக்குழு ஒவ்வொரு சுயேச்சைக் குழுவுக்கும் அங்கீகரிக்கப்பட்ட தேர்தல் சின்னங்களைக் குறித்தொதுக்கி ஒவ்வொரு பட்டியலிலுமுள்ள வேட்பாளர்களின் பெயர்களை சிங்கள அகரவரிசைப்படி தயாரித்து வேட்பாளர்கள் ஒவ்வொருவருக்கும் விருப்பு இலக்கமொன்றும் சுயேச்சைக் குழு ஒவ்வொன்றுக்கும் அடையாளம் காணும் இலக்கமொன்றும் விருப்பு இலக்கங்களும் வழங்கப்பட்டது. இது தொடர்பான அனைத்து விபரங்களும் 2405/50 ஆம் இலக்க 2024.10.11 ஆம் திகதிய அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்பட்டது. மேலும் 13,314 தேர்தல் மாவட்டங்கள் சார்பாக நிறுவப்பட்ட 13,421 வாக்கெடுப்பு நிலையங்கள் குறித்தும் இதில் தகவல்கள் உள்ளடக்கப்பட்டிருந்தது.

## 05. அஞ்சல் வாக்களிப்பு

அஞ்சல் வாக்கெடுப்பு முறையென்பது உலகில் காணக்கூடிய வாக்கெடுப்பு முறைகளில் முன்கூட்டியே வாக்களிக்கின்ற ஒரு முறையாகும். வேறு நாடுகளில் அனைத்து தேருநர்கள் சார்பாக அஞ்சல் வாக்கு செயன்முறையை ஒத்த முறைகள் நடைமுறையிலிருந்தபோதும், இலங்கைத் தேர்தல் முறையில் அது தேர்தல் தினக் கடமைகளில் ஈடுபட்டுள்ள அலுவலர்களுக்கும் அத்தியாவசிய சேவைகளில் ஈடுபட்டுள்ளவர்களுக்கும் வாக்களிப்பதற்குரிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக பயன்படுத்தப்படுகின்றது. அஞ்சல் வாக்கெடுப்பு முறை, விகிதாசார பிரதிநிதித்துவ முறை ஆரம்பிப்பதற்கு முன்னர் இலங்கையில் ஆரம்பமானதாகும். 1959 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க இலங்கைப் பாராளுமன்றத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டத்தினால் முதல் தடவையாக அஞ்சல் வாக்கைப் பயன்படுத்தும் சந்தர்ப்பம் இலங்கை வாக்காளர்களுக்கு கிடைத்துள்ளது. முதல் தடவையாக தேர்தலொன்றின் போது 1960 இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் அஞ்சல் வாக்களிக்கப்பட்டது. அஞ்சல் வாக்களிப்பதற்கு தகைமை பெறுவோர் யார் என்பது பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 26(2) ஆம் பிரிவில் குறிப்பிடப்படுகிறது. அதில் குறிப்பிடப்படுகின்றவாறு முப்படை அங்கத்தவர்களுக்கும் பொலிஸ் திணைக்கள பொலிஸ் அலுவலர்களுக்கும் சிறைச்சாலைத் திணைக்கள அதிகாரிகளுக்கும் புகையிரத, அஞ்சல் மற்றும் தொலைத்தொடர்பு ஆகிய திணைக்கள பணியாட்குழுவினருக்கும், இலங்கை போக்குவரத்துச் சபையின் பணியாட்குழுவினருக்கும், தேர்தல் கடமைகள் ஒப்படைக்கப்படும் அரச அல்லது மாகாண அரச சேவையின் அல்லது இலங்கை மத்திய வங்கி அதிகாரிகளுக்கும் வசிக்கும் மாவட்டம் தவிர்ந்த வேறு நிர்வாக மாவட்டமொன்று சார்பாக தேர்தலொன்றின்போது போட்டியிடும் வேட்பாளர்களுக்கும், இந்த வசதியைப் பெற்றுக் கொள்ள விண்ணப்பிக்க முடியும். மேற்குறிப்பிட்ட நிறுவனங்களின் அலுவலர்களுக்கு அப்பால் 1981 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 129 ஆம் பிரிவின் கீழ் தேர்தல் ஆணைக்குழுவிற்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின்படி தெரிவுசெய்யப்பட்ட அத்தியாவசிய சேவைகளை வழங்கும் நிறுவனங்களின் தேர்தல் தினக் கடமைகளில் ஈடுபடுத்த எதிர்பார்க்கப்படும் அலுவலர்களுக்கும் மாத்திரம் அஞ்சல் வாக்களிக்கும் உரிமை வழங்கப்பட்டுள்ளது.

அதேபோல் அஞ்சல் வாக்கு விண்ணப்பத்தை பூரணப்படுத்துவதற்கு விண்ணப்பதாரர்களுக்கு தமது தேருநர் பதிவுத் தகவல்களை பூர்த்தி செய்ய நேரிடும். ஆகையால், அதற்கு தேருநர் இடாப்புக்கள், மாவட்ட தேர்தல்கள் அலுவலகங்களிலும் பிரதேச செயலகங்களிலும், கிராம அலுவலர் அலுவலகங்களிலும் காட்சிப்படுத்தப்பட்டன. இது தவிர அரச அலுவலர்களில் பெரும்பாலானவர்கள் இடவமர்த்தப்பட்டிருக்கும் அரசாங்க நிர்வாக அமைச்சு, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, தொழில் செயலகம், கல்வி அமைச்சு, பதிவாளர் நாயகம் திணைக்களம், அஞ்சல் தலைமையகம், கடற்றொழில் மற்றும் நீரியல்வள அபிவிருத்தி அமைச்சு, செத்சிறிபாய கட்டடம் 01 முதலான கொழும்பு மாவட்டத்தின் அரச அலுவலகங்கள் அமைந்துள்ள வளவுகளிலும் தேருநர் இடாப்புக்களை காட்சிக்கு வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. மேலும், பாதுகாப்புப் பிரிவுகளின் அங்கத்தவர்களும் பொலிஸ் அலுவலர்களும் நாடுபூராவும் உள்ள தொழில் இடங்களில் பணிபுரிவதனால், முப்படைகளுக்கும் பொலிஸாருக்கும் உரிய தொழில் இடங்களில், அஞ்சல் வாக்கு வசதிக்கு விண்ணப்பிப்போரின் பதிவுத் தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கு தேருநர் இடாப்புப் பிரதிகளை இறுவட்டுக்களாக தயாரித்து தேர்தல்கள் செயலகத்திலிருந்து பெற்றுக்கொள்வதற்கு வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டிருந்தது. இது தவிர தேர்தல்கள் செயலகத்தில் இத்தகவல்களை வழங்குவதற்கென்றே நிறுவப்பட்டிருந்த விசேட தொலைபேசி மார்க்கங்களின் (1919) மூலமும் அரச தகவல் மையத்தின் மூலமும் தேவைப்படுவோருக்கு தேருநர் இடாப்பில் தமது பதிவு விபரங்களைப் பெற்றுக்கொள்வதற்கு வசதியளிக்கப்பட்டிருந்தது.

2024 பாராளுமன்றத் தேர்தலுக்குரிய அனைத்து அஞ்சல் வாக்கு விண்ணப்பதாரிகளதும் அஞ்சல் வாக்கு விண்ணப்பங்கள் 2024.10.01 ஆம் திகதி முதல் 2024.10.08 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்பட்டது. பின்னர் தேர்தல் ஆணைக்குழுவினால் அக்டோபர் 10 ஆம் திகதி வரை இக் காலப்பகுதி நீடிக்கப்பட்டது. 2024 ஆம் ஆண்டில் அத்தாட்சிப்படுத்திய 2024 சனாதிபதித் தேர்தலுக்கும் உபயோகிக்கப்பட்ட இடாப்பு இதற்கு செல்லுபடியான தேருநர் இடாப்பாக இருந்த போதிலும், கடந்த சனாதிபதித் தேர்தலுக்கு அஞ்சல் வாக்கு விண்ணப்பித்த அனைத்து அஞ்சல் வாக்கு விண்ணப்பதாரிகளுக்கும் இத்தேர்தலுக்காக மீண்டும் தமது அஞ்சல் வாக்கு விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பது கட்டாயமானதென்று 2024.09.29 ஆம் திகதி வெளியிடப்பட்ட PE/2024/03 என்ற ஊடக அறிவித்தலின் மூலம் அறிவிக்கப்பட்டது. இம்முறை அஞ்சல் வாக்களிப்பதற்கு 759,083 விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அவற்றில் 737,902 விண்ணப்பங்கள் அஞ்சல் வாக்களிப்பதற்காக ஏற்றுக்கொள்ளப்பட்டது. அஞ்சல் வாக்காளர்களின் பட்டியல்கள் 2024 அக்டோபர் மாதம் 16 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டதுடன், அஞ்சல் வாக்குச் சீட்டுக்களின் விநியோகமும் அஞ்சலுக்கு ஒப்படைத்தலும் 2024 அக்டோபர் மாதம் 23 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்டது.

அதன்படி அக்டோபர் 30, நவம்பர் 04 ஆகிய தினங்களில் மாவட்ட செயலக வளவுகள், தேர்தல் அலுவலக வளவுகள், பொலிஸ் நிலையங்கள், பொலிஸிற்குரிய அலுவலகங்களில் அஞ்சல் வாக்கு அடையாளமிடப்பட்டது. நவம்பர் 01, நவம்பர் 04 ஆகிய தினங்களில் முப்படை முகாம்களிலும் ஏனைய எல்லா அரச நிறுவனங்களிலும் அஞ்சல் வாக்கு அடையாளமிடப்பட்டது. அதேபோல் இந்நாட்களில் அஞ்சல் வாக்கு அடையாளமிட முடியாமல் போனவர்களுக்கு நவம்பர் மாதம் 7, 8 ஆகிய இரு தினங்களிலும் அஞ்சல் வாக்களிக்கும் சந்தர்ப்பம் உருவானது.

## 6. இயலாமைக்குட்பட்ட வாக்காளரொருவருக்கு வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்குச் சீட்டை அடையாளமிடுவதற்கு உதவியாள் ஒருவரை உடனழைத்துச் செல்வதற்கு அவசியமான சட்ட ஏற்பாடுகளைச் செய்தல்

2011 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 40(2) ஆம் பிரிவின் படி 2024.11.14 ஆம் திகதி நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலின் போது பூரண அல்லது பகுதியளவில் விழிப்புலனற்ற நிலைக்கு அல்லது யாதேனும் உடலியல் இயலாமைக்குட்பட்ட வாக்காளர் ஒருவருக்கு வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்குச்சீட்டில் அடையாளமிடுவதற்காக உதவியாள் ஒருவரை உடனழைத்துச் செல்லக்கூடிய வகையில் சட்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக அறிவித்து பத்திரிகை விளம்பரங்களும் ஊடக அறிவித்தல்களும் வெளியிடப்பட்டன.

## 7. உடலியல் இயலாமைக்குட்பட்ட ஆட்கள் விசேட போக்குவரத்து வசதிகளைக் கோரி விண்ணப்பித்தல்

1981 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 83(4)(ஈ) பிரிவின் படி யாதேனும் உடலியல் இயலாமையொன்று காரணமாக ஆளொருவருக்கு நடந்து செல்ல அல்லது இலங்கை மத்திய போக்குவரத்துச் சபை அல்லது யாதேனும் பிராந்திய போக்குவரத்துச் சபையொன்று அல்லது இலங்கை அரசாங்கத்தின் புகையிரத சேவை அல்லது யாதேனும் ஒரு பொதுப் போக்குவரத்துச் சேவையினால் வழங்கப்படும் ஒரு போக்குவரத்துச் சேவையின் மூலம் வாக்கெடுப்பு நிலையத்திற்குச் சென்று வர முடியாத நிலையிருப்பின், தனக்கு வாக்கெடுப்பு நிலையத்திற்குச் சென்று வர தனது தேர்தல் மாவட்டத்தின் தெரிவத்தாட்சி அலுவலருக்கு தானே அல்லது அவ்வாறன்றேல் தன் சார்பாக வேட்பாளர் ஒருவர், வாக்கெடுப்பு நிலைய முகவர் ஒருவர், அதிகாரமளிக்கப்பட்ட முகவர் ஒருவர், பெரும்பாக முகவர் ஒருவர் அல்லாத வேறு ஒருவரினால் அல்லது விண்ணப்பப்பத்திரமொன்றைச் சமர்ப்பிக்க முடியும் என்றும் இவ்வசதிகளுக்கான விண்ணப்பப் படிவங்களை பாராளுமன்றத் தேர்தலுக்கு சில நாட்களுக்கு முன்னர் அதாவது 2024 நவம்பர் மாதம் 07 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் சம்பந்தப்பட்ட தெரிவத்தாட்சி அலுவலருக்கு கிடைக்கக்கூடிய வகையில் சமர்ப்பிப்பது சட்ட ரீதியான ஒரு தேவைப்பாடாக இருப்பதோடு, தெரிவத்தாட்சி அலுவலர் திருப்தியடைவாராயின் அவருக்கு விசேட போக்குவரத்து வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்கான அனுமதிப்பத்திரங்களை வழங்க முடியும் என்றும் அறிவித்து பத்திரிகை மற்றும் ஊடக அறிவித்தல்கள் வெளியிடப்பட்டன.

## 8. உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள்

1981 ஆம் ஆண்டின் பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 27(1) ஆம் பிரிவின்படி, தேருநர்களின் பெயர்கள் தேருநர் இடாப்பில்

பதிவுசெய்யப்பட்டுள்ள விதமும் வாக்காளருக்கு ஒதுக்கப்பட்டுள்ள வாக்கெடுப்பு நிலையமும் வாக்கெடுப்புத் திகதியும் நேரமும் வாக்காளர் ஒருவருக்கும் வாக்கெடுப்பு நடைபெறுவதற்கு 07 நாட்களுக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு 'உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டை' மூலம் அறிவிக்கப்பட வேண்டும். இத்தகவல்களை அறிவிக்கும் தேவை 1946 இலங்கை (பாராளுமன்றத் தேர்தல்கள்) கட்டளைச் சட்டத்திற்கும், 1959 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க திருத்தச் சட்டத்தின் மூலம் தேர்தல் சட்டத்திற்கும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை கணினிமயப்படுத்தப்பட்டுள்ள தேருநர் இடாப்புத் தகவல்களின் துணையுடன் அச்சிடுவதற்காக அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கி, அட்டைகளை அச்சிடுவதற்காக தேர்தல் ஆணைக்குழுவினால் மையப்படுத்தி மேற்கொண்டு அந்த அறிவித்தல்களை அஞ்சலிடுவதற்காக தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு வழங்குவது தேர்தல் செயன்முறையின் ஒரு முன்னோடி நடவடிக்கையாகும். தற்போது இந்த உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டை தேர்தல் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தின் மூலம் சம்பந்தப்பட்ட வாக்காளருக்கு எந்தவொரு சந்தரப்பத்திலும் பதிவிறக்கம்செய்து அச்சிட்டுக்கொள்ளும் வசதிகளும் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

## 9. செல்லுபடியான அடையாள அட்டைகள்

2004 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் ஆட்களைப் பதிவுசெய்யும் திணைக்களம் மூலம் வழங்கப்பட்டுள்ள தேசிய அடையாள அட்டை, வாக்குச் சீட்டொன்றை வாக்காளர் பெற்றுக் கொள்ள முன்னர் வாக்கெடுப்பு நிலையத்தில் சமர்ப்பிக்கும் சட்டரீதியான தேவை குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கு மேலதிகமாக செல்லுபடியான கடவுச்சீட்டு, செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம், ஓய்வூதியத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட அரச சேவை ஓய்வூதியர் அடையாள அட்டை, பிரதேச செயலகத்தினால் வழங்கப்பட்ட முதியோர் அட்டை, ஆட்களைப் பதிவுசெய்யும் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட வணக்கத்திற்குரிய/ மதகுரு அடையாள அட்டை 2024 பாராளுமன்றத் தேர்தலுக்காக ஆட்களை பதிவுசெய்யும் திணைக்களத்தினால் வழங்கப்படும் 'தேசிய அடையாள அட்டையை உறுதிப்படுத்தும் கடிதம்', வலிமையிழந்தோருக்காக தேர்தல் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தற்காலிக அடையாள அட்டை, தேர்தல் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட தற்காலிக அடையாள அட்டை ஆகியனவற்றை இம்முறை பாராளுமன்றத் தேர்தலின் போது வாக்களிப்பதற்காக வாக்காளர்களுக்கு தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தவதற்காக சமர்ப்பிப்பதற்கு வாய்ப்பளிக்கப்பட்டிருந்தது.

## 10. தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்காக வேட்பாளர்களுக்கு வானலை கால வசதிகளை வழங்குதல்.

1988 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1981 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 126 ஆம் பிரிவின்படி நியமனப் பத்திரமொன்றைக் கையளித்துள்ள அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி ஒவ்வொன்றுக்கும் சுயேச்சைக் குழு ஒவ்வொன்றுக்கும் அரசியல் வானலைப் பிரச்சாரங்களுக்கு வானொலி மற்றும் தொலைக்காட்சி மூலம் இலவச பிரச்சார வசதிகளை வழங்க வேண்டியுள்ளது. இம்முறை பாராளுமன்றத் தேர்தலுக்கு போட்டியிடும் அரசியல் கட்சிகளின் எண்ணிக்கைப் படியும் வாக்கெடுப்பு நடைபெறும் திகதியினையும் கவனத்தில் எடுக்கும் போது வானலை காலங்களை வழங்குவதற்கு இருந்த காலப்பகுதி மிகவும் குறுகியது என்பதால் இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தினதும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினதும் தலைவர்களின் ஒப்புதலுடன் தேர்தல் ஆணைக்குழுவினால் நியமனப் பத்திரங்கள் கையளிக்கப்பட்டிருந்த அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் அனைத்திற்கும் அநீதி ஏற்படாதவாறு வானலைக் காலம் ஒதுக்கிக் கொடுக்கப்பட்டிருந்தது.

இதற்கு வானலை காலத்தை ஒதுக்கும் திருவுளச்சீட்டிழுப்பு 2024.10.22 ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு கொழும்பு மாவட்ட செயலகத்தில் முதலாம் மாடியில் அமைந்துள்ள பிரதான கேட்போர் கூடத்தில் மேற்கொள்ளப்பட்டது. இங்கு இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தினால் 282 சுயேச்சைக் குழுக்களுக்கு 15 நிமிடங்கள் வீதமும் 17 அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளுக்கு 45 நிமிடங்கள் வீதமும் 26 கட்சிகளுக்கு 30 நிமிடங்கள் வீதமும் இன்னும் 07 கட்சிகளுக்கு 15 நிமிடங்கள் வீதமும் வானலைக் காலம் ஒதுக்கிக்கொடுக்கப்பட்டுள்ளது. அதேபோல் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினாலும் அதற்கு நிகராக வேட்பாளர்களின் ஆளடையாளத்தினை கருத்திற்கொண்டு மும்மொழிகளிலும் மேற்படி கால ஒதுக்கீடுகளின் படி வானலை காலம் ஒதுக்கிக்கொடுக்கப்பட்டது. எவ்வாறாயினும், இச்சந்தர்ப்பத்தினை வேட்பாளர்கள் அனைவரும் பூரணமாக பெற்றுக்கொண்டிருக்கவில்லை.

மேலும் வேட்பாளர்களுக்கு வழங்கப்பட்ட இந்த வானலை கால வசதிகளின் கீழ் உரை நிகழ்த்தும் போது அதற்கான ஒழுக்கநெறிக்கோவையொன்றும் தேர்தல் ஆணைக்குழுவினால் தயாரிக்கப்பட்டுள்ளது. அதன்படி எந்தவொரு கட்சிக்கு/ குழுவுக்கு வேறொரு கட்சி/ குழு சார்பாக உரை நிகழ்த்துதல் கட்சிகள/குழுக்களின் கொள்கைக்குரிய விடயங்கள் தவிர்ந்த ஆத்திரமூட்டும், காழ்புணர்ச்சிகொண்ட, வெறுப்பூட்டும் பேச்சுக்கள் அல்லது யாதேனுமொரு தரப்பிற்கு பாதிப்பு ஏற்படும் படியாக உரை நிகழ்த்தப்படலாகாதென்ற நிபந்தனைகளும் உட்சேர்க்கப்பட்டன.

## 11. பணிப்புகள், ஊடக வழிகாட்டிநெறிகள் மற்றும் ஒழுக்கநெறிகள்

இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 104 ஆ (5) (அ) இன் கீழ் தேர்தல் ஆணைக்குழுவிற்கு உறித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் சுயேச்சைக் குழுக்களுக்கும் அனைத்து ஊடக நிறுவனங்களுக்கும் தேர்தல் காலப்பகுதியினுள் பின்பற்றியொழுக வேண்டிய பணிப்புகள், ஊடக வழிகாட்டி நெறிகள், ஒழுக்கநெறிகள் பற்றி கூட்டங்களை நடாத்தி அறிவுறுத்தப்பட்டுள்ளதுடன், அது சம்பந்தமாக தேர்தல் ஆணைக்குழுவினால் 2403/19, 2403/20, 2403/21 ஆம் இலக்க 2024 செப்தெம்பர் 25 ஆம் திகதிய 03 அதிவிசேட வர்த்தமானிகள் வெளியிடப்பட்டுள்ளன.

தேர்தல் காலமொன்றில் பொது மக்களுக்கு அது குறித்த தகவல்களை வழங்குவதற்காக இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களை பாவிக்க

நேரிடும். தேர்தலில் போட்டியிடும் அரசியல் கட்சிகளினாலும் சுயேச்சைக் குழுக்களினாலும் தமது வெற்றியின் பின்னர் நாட்டின் அபிவிருத்திக்காக அமுல்படுத்த எதிர்பார்க்கப்படும் திட்டங்களும் கருத்திட்டங்களும் குறித்து ஊடகங்கள் வாயிலாக அறிவுறுத்தப்படுகிறது. இவ்வாறான தகவல்களையும், கட்சிகள் சுயேச்சைக் குழுக்களின் பிரச்சார நடவடிக்கைகளையும் சரிசமமாகஃ நடுநிலையாக ஊடகங்களின் ஊடாக அறிக்கையிடுவதனை எதிர்பார்க்கப்படுகிறது. அவ்வாறன்றி பக்கச்சார்பாக செயலாற்றுவது மற்றுமொறு தரப்பிற்கு இழைக்கும் பாரதூரமான ஓர் அநீதியாகும். அரச ஊடகங்கள் போலவே தனியார் ஊடகங்களும் தேர்தல் தொடர்பான செய்திகளை அறிக்கையிடும் போது நடுவுநிலைமையுடன் செயலாற்றுவது இங்கு எதிர்பார்க்கப்பட்டது.

மேலும் சனாதிபதித் தேர்தலின் போது தேர்தல் ஆணைக்குழுவின் ஊடக அலகினால் மிகவும் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்ட உத்தியோகபூர்வ சமூக ஊடக நேரலை ஒலிபரப்பு இப் பாராளுமன்ற தேர்தல் நடைபெற்ற திகதியிலும் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டது. இம்முறையும் அதற்கான நிதி அனுசரணை தேர்தல் முறைகளுக்கான சர்வதேச அமைப்பினால் வழங்கப்பட்டது.

## 12. சட்டங்களை அமுல்படுத்தல்

தேர்தலொன்று நடைபெறும் காலப்பகுதியில் அது சம்பந்தமாக உள்ள சட்ட மீறல்களும் முறைப்பாடுகளும் சம்பந்தமாக செயலாற்றுவதற்கு தேர்தல் ஆணைக்குழுவின் தலைமையில் நிறுவப்படும் தேர்தல் பிணக்குகள் முகாமைத்துவ நிலையங்கள் நாடுபூராகவும் இயங்குகின்றன. அரசியலமைப்பின் 104(ஆ)(4)(அ) இன் படி தேர்தல் காலப்பகுதியில் அரசுக்கு அல்லது அரச கூட்டுத்தாபனங்களுக்கு சொந்தமான அசையா அல்லது அசையும் ஆதனமொன்றை போட்டியிடும் வேட்பாளர் ஒருவர், அரசியல் கட்சியொன்றின் அல்லது சுயேச்சைக் குழுவொன்றின் ஊக்கப்படுத்தலுக்கு அல்லது தடுக்கும் நோக்கத்திற்குப் பயன்படுத்துவதற்கு அத்தேர்தலின் போது வேட்பாளர் ஒருவர், அரசியல் கட்சியொன்றை அல்லது சுயேச்சைக் குழுவொன்றைப் பயன்படுத்துவதை ஆணைக்குழுவின் தவிசாளரின் அல்லது தலைவரின் எழுத்திலான பணிப்பொன்றின் மூலம் தடைசெய்யும் தத்துவம் தேர்தல் ஆணைக்குழுவுக்கு உண்டு. மேலும் அரசுக்கும் அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட சபைகளுக்கும் சொந்தமான ஆதனங்கள் தேர்தல் காலப்பகுதியினுள் முறைகேடான விதத்தில் பயன்படுத்துவதனைத் தடுப்பதும் அலுவலர்களையும் ஊழியர்களையும் ஆட்சேர்ப்பு செய்தல், பதவி உயர்த்துதல், இடமாற்றம் செய்வதனை மட்டுப்படுத்துவது சம்பந்தமாக செயலாற்றப்பட வேண்டிய விதத்தினை உள்ளடக்கி 2024.09.25 ஆம் திகதிய ீநுஃ2024ஃ03 சுற்றுநிருபமும் தேர்தல் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டுள்ளது. இது தவிர தேர்தல் தவறுகள், ஊழல்கள் மற்றும் சட்டவிரோத செயல்பாடுகள், சமூக ஊடகங்கள் வாயிலாக மேற்கொள்ளப்படும் சட்டமீறல்கள் ஆகியன குறித்து கிடைக்கும் முறைப்பாடுகள் குறித்து ஆராய்ந்து அது சம்பந்தமாக செயலாற்றுவதற்கும் சமூக ஊடகங்கள் வாயிலாக இடம்பெறும் சட்டவிரோத பிரச்சார நடவடிக்கைகளின் போது சம்பந்தப்பட்ட தரப்புக்கள் ஆணைக்குழுவிற்கு அழைத்து அறிவுறுத்தல்களை வழங்கி அவ்வாறான நடவடிக்கைகளை இடைநிறுத்துவதற்கு செயலாற்றுதல் முதலான சமூக ஊடகங்கள் சம்பந்தமான முறைப்பாடுகள் தொடர்பில் செயலாற்றுவதற்கு தனிவேறான அலகொன்றும் தேர்தல் ஆணைக்குழுவின் தலைமை அலுவலகத்தில் நிறுவப்பட்டிருந்தது. அனைத்து தேர்தல் முறைப்பாட்டு விசாரணை அலகுகளுக்கும் தொலைபேசி, தொலைநகல், மின்னஞ்சல், வட்ஸ்ஸப் ஆகியவற்றின் மூலம் தேர்தல் முறைப்பாடுகளை முன்வைக்கக்கூடிய விதத்தில் வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருந்தது. அது தொடர்பாக பொது மக்களை அறிவூட்டுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

## 13. கண்காணிப்பு நடவடிக்கைகள்.

இத் தேர்தலில் கண்காணிப்பு நடவடிக்கைகளில் 10 உள்நாட்டு கண்காணிப்பு அமைப்புக்கள் கலந்துகொண்டன இந்த நிறுவனங்களில் தேர்தல் வன்செயல்கள் கண்காணிப்பு நிலையம் (CMEV), சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலொன்றுக்கான மக்கள் செயற்பாடு (PAFFREL) ஆகிய அமைப்புக்களுக்கு வாக்கெடுப்பு நிலையங்களுக்குள் இருந்து கண்காணிப்பு நடவடிக்கைகளைக் மேற்கொள்வதற்கு அனுமதியளிக்கப்பட்டிருந்தது. இது தவிர தேர்தல் ஆணைக்குழுவின் அழைப்பின் பேரில் தேர்தல் நடவடிக்கைகளை கண்காணிப்பதற்கு தெற்காசிய தேர்தல் அதிகாரிகளின் அமைப்பின் பிரதிநிதிகளை உள்ளடக்கிய கண்காணிப்புக் குழுவொன்று பங்குபற்றியது. இது தவிர ஆணைக்குழுவின் சிபார்சின் பேரில் ஐரோப்பிய ஒன்றியத்தின், அன்ப்ரல் அமைப்பின் முகவர்களும் கேம்ப்ரிஜ் நிறுவனத்தின் பிரதிநிதிகளும் வாக்கெடுப்பைக் கண்காணித்தனர். இத்தேர்தல் நடவடிக்கைகள் சுதந்திரமாகவும் நியாயமாகவும் இடம் பெற்றறதாக அவர்களின் பின்னைய கண்காணிப்பு அறிக்கைககள் குறிப்பிடுகின்றன.

## 14. தேர்தல் செலவினத்தை ஒழுங்குபடுத்துதல்

2024 பாராளுமன்றத் தேர்தலுக்கு போட்டியிடும் அனைத்து அரசியல் கட்சிகள், சுயேச்சைக் குழுக்கள் மற்றும் வேட்பாளர்கள் 2023 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க தேர்தல் செலவினத்தை ஒழுங்குபடுத்துதல் சட்டத்தின் 03 ஆம் பிரிவிற்கமைய தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்காக செலவிடக்கூடிய ஆகக்கூடிய செலவின எல்லை 2406ஃ03 ஆம் இலக்க 2024 அக்டோபர் 15 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் ஒன்றின் மூலம் வெளியிடப்பட்டது. அதன்படி மாவட்ட வாரியாக வேட்பாளர் ஒருவருக்கு, கட்சியொன்றுக்குஃ சுயேச்சைக் குழுவொன்றுக்கு, தேசியப் பட்டியல் வேட்பாளர் ஒருவருக்கு செலவிடப்படக்கூடிய ஆகக்கூடிய செலவின எல்லை பின்வருமாறு

| தேர்தல் மாவட்டம் | வேட்பாளர் ஒவ்வொருவருக்கும் செலவிடக்கூடிய உயர்ந்தபட்ச தொகை (ரூபா) | கட்சிக்குஃ சுயேச்சைக் குழுவிற்கு செலவிடக்கூடிய உயர்ந்தபட்ச தொகை (ரூபா) | தேசியப் பட்டியல் வேட்பாளர் ஒருவருக்கு செலவிடக்கூடிய உயர்ந்தபட்ச தொகை (ரூபா) |
|---|---|---|---|
| கொழும்பு | 5,750,000 | 79,493,756 | 34,698 |
| கம்பஹா | 5,643,387 | 81,735,055 | 35,677 |
| களுத்துறை | 4,740,787 | 43,694,249 | 19,072 |
| கண்டி | 5,146,844 | 50,825,081 | 22,185 |

| தேர்தல் மாவட்டம் | வேட்பாளர் ஒவ்வொருவருக்கும் செலவிடக்கூடிய உயர்ந்தபட்ச தொகை (ரூபா) | கட்சிக்குஃ சுயேச்சைக் குழுவிற்கு செலவிடக்கூடிய உயர்ந்தபட்ச தொகை (ரூபா) | தேசியப் பட்டியல் வேட்பாளர் ஒருவருக்கு செலவிடக்கூடிய உயர்ந்தபட்ச தொகை (ரூபா) |
|---|---|---|---|
| மாத்தளை | 3,450,678 | 18,173,570 | 7,933 |
| நுவரெலியா | 3,631,752 | 26,299,937 | 11,480 |
| காலி | 4,922,238 | 38,885,683 | 16,973 |
| மாத்தறை | 4,487,585 | 29,543,265 | 12,895 |
| ஹம்பாந்தோட்டை | 3,469,460 | 22,840,614 | 9,970 |
| யாழ்ப்பாணம் | 3,954,580 | 23,430,887 | 10,227 |
| வன்னி | 1,673,243 | 9,913,964 | 4,327 |
| மட்டக்களப்பு | 3,709,910 | 19,538,857 | 8,529 |
| திகாமடுல்ல | 3,765,829 | 24,791,707 | 10,821 |
| திருகோணமலை | 3,114,118 | 14,350,893 | 6,264 |
| குருணாகல் | 5,054,773 | 59,899,057 | 26,145 |
| புத்தளம் | 3,945,838 | 28,574,441 | 12,472 |
| அநுராதபுரம் | 4,080,241 | 32,233,904 | 14,070 |
| பொலன்னறுவை | 2,871,894 | 15,125,308 | 6,602 |
| பதுளை | 3,846,457 | 30,387,013 | 13,264 |
| மொணராகலை | 2,927,217 | 17,343,763 | 7,570 |
| இரத்தினபுரி | 4,354,755 | 40,136,329 | 17,519 |
| கேகாலை | 3,831,959 | 30,272,475 | 13,214 |

தேர்தல் பிரச்சார செலவுகள் அடங்கிய செலவின விபரத்திரட்டு தேர்தல் முடிவுகளை வெளியிட்டு 21 நாட்களுக்குள் கட்சிச் செயலாளரின், சுயேச்சைக் குழுத் தலைவரின் வேட்பாளரின் கையொப்பம்: சத்தியப்பிரமாண ஆணையாளர் அல்லது சமாதான நீதவானினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு தேர்தல் ஆணைக்குழுவிற்கு ஒப்படைக்கப்பட வேண்டும். மேலும் வேட்பாளர் சார்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட அல்லது பொறுப்பேற்கப்பட்ட அன்பளிப்புகள் அல்லது உதவுதொகைகள் ஏதும் இருப்பின், அத்தோடு அத்தகைய அன்பளிப்புகள் அல்லது பங்களிப்புகள் பொருள் ரீதியாக கிடைத்திருக்குமாயின் அவற்றின் மதிப்பீட்டு பெறுமதியும், அத்தகைய உதவுதொகைகள், அன்பளிப்புகள் வழங்கப்பட்டது கொடைகளாகவா, கடன்களாகவா , முற்பணங்களாகவா அல்லது வைப்புக்களாகவா என்பது இவ் விபரத்திரட்டில் தெளிவாக குறிப்பிடப்பட வேண்டும் என்றும் இங்கு வலியுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் இத்தேர்தலில் போட்டியிடுவதற்கு நியமனப்பத்திரங்களை கையளித்த அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் செயலாளர்களுக்கு தேர்தல் ஆணைக்குழுவின் தலைமை அலுவலகத்திலும், சுயேச்சைக் குழுத் தலைவர்களுக்கு அந்தந்த மாவட்ட செயலகங்களிலும் இச் சட்டம் குறித்து அறிவுறுத்தி அது தொடர்பான தகவல்களும் அறிவுறுத்தல்களும் மாதிரிப்படிவங்களும் அங்கீகரிக்கப்பட்ட நியமனப் பத்திரங்களை வழங்கிய அனைத்து அரசியல் கட்சிகளின் அதிகாரமளிக்கப்பட்ட முகவர்கள், சுயேச்சைக் குழுக்களின் குழுத் தலைவர்கள் மற்றும் வேட்பாளர்களுக்கு வழங்குவதற்கும் தேர்தல் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்தது.

## 15. தேர்தலும் வாக்கெண்ணலும்

நாட்டில் அமைந்துள்ள 22 தேர்தல் மாவட்டங்களில் 13,421 வாக்கெடுப்பு நிலையங்களில் தேர்தல் நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு அவசியமான அனைத்து ஏற்பாட்டு நடவடிக்கைகளையும் அதற்கு முந்திய நாள் தெரிவத்தாட்சி அலுவலர்கள் நிறைவேற்றினர். வாக்கெடுப்பு நிலையங்களுக்குப் பொறுப்பாக செயற்படும் சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்கள் உட்பட ஏனைய பணியாட்குழுவும் வாக்கெடுப்பு நிலையங்களுக்கு தேவைப்படும் பொருள்கள் ஆகியன தேர்தல் நடைபெறும் தினத்திற்கு முந்திய தினம் வாக்கெடுப்பு நிலையங்களை நோக்கி அனுப்பிவைக்கப்பட்டன. விநியோகித்தல்கள், பொறுப்பேற்றல்கள், வாக்கெண்ணும் மண்டபங்கள், வாக்கெடுப்பு நிலையங்களுக்கு அரசுக்குச் சொந்தமான கட்டிடங்களும், பாடசாலைகள் மற்றும் வழிபாட்டு இடங்களும் கட்டிடங்களும் பயன்படுத்தப்பட்டன. போட்டியிட்ட கட்சிகள்ஃ சுயேச்சைக் குழுக்களின் எண்ணிக்கைப்படி பொலன்னறுவை, மொணராகலை, கேகாலை ஆகிய தேர்தல் மாவட்டங்களின் வாக்குச் சீட்டுக்கள் ஒரு வரிசையாகவும் ஏனைய தேர்தல் மாவட்டங்களின் வாக்குச் சீட்டுக்கள் இரண்டு வரிசைகளாகவும் அச்சிட நேரிட்டது. (ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திற்கும் உரிய வாக்குச் சீட்டின் மாதிரியொன்றை ஒவ்வொரு வீட்டுக்கும் அனுப்பிவைக்கப்பட்ட உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டையுடன் வழங்கப்படும் வேட்பாளர் பட்டியலில் உட்சேர்க்க நடவடிக்கையெடுக்கப்பட்டிருந்தது.) போட்டியிடும் கட்சிகள்ஃ சுயேச்சைக் குழுக்கள் அதிகரிப்பு இதன் காரணமாக ஒரு வாக்குச் சீட்டுப் பெட்டியில் இடக்கூடிய வாக்குச் சீட்டுக்களின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டிருப்பதன் பேரில் இத்தேர்தலுக்கும் தடித்த காகித அட்டையிலான வாக்குச் சீட்டுப் பெட்டிகள் பயன்படுத்தப்பட்டன. அதன்படி,

**1200 வாக்குகளுக்கு குறைந்த நிலையங்களுக்கு**
16 ½ x 13x 22 = 7850 (சிறிய)
**1200-2400 வாக்குகள் கொண்ட நிலையங்களுக்கு**
21 x 14 ½ x 23 = 3775 (நடுத்தர)
**2400 வாக்குகளுக்கு மேற்பட்ட நிலையங்களுக்கு**
24 x 17 x 26 = 2525 (பெரிய)

என்றவாறு தடித்த காகித அட்டையிலாலான வாக்குச் சீட்டுப் பெட்டிகள் பயன்படுத்தப்பட்டன. வாக்காளர்களுக்கு வாக்களிப்பதற்காக முந்திய சனாதிபதித் தேர்தலின் போது முற்பகல் 07.00 மணி தொடக்கம் பிற்பகல் 04.00 மணி வரை வாக்கெடுப்பு நிலையத்தில் வரிசையில் காத்திருக்கும் அனைவருக்கும் வாக்களிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. மாவட்ட மட்டத்தில் நிறுவப்பட்டிருந்த 54 வாக்கெண்ணும் வளவுகளில் தேர்தலில் போட்டியிட்ட தரப்புக்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் வாக்கெண்ணும் பணி இடம்பெற்றது. அதன்படி,

பொதுவான வாக்கெண்ணும் மண்டபங்களின் எண்ணிக்கை – 1582
அஞ்சல் வாக்கெண்ணும் மண்டபங்களின் எண்ணிக்கை – 452
முடிவுகளை வெளியிடும் நிலையங்கள் – 22
நிறுவப்பட்டிருந்தன.

ஒவ்வொரு தேர்தல் மாவட்ட வாரியாக அஞ்சல் வாக்கு முடிவுகளையும் வாக்கெடுப்புப் பிரிவு வாரியாகவும் தேர்தல் மாவட்ட வாரியாகவும் பொதுவாக வாக்குச் சீட்டுக்களை எண்ணி முடிவுகளை தயாரிக்கும் நிலையங்களில் முடிவுகளை கையினால் தயாரிப்பதனையும், கணினி முறைமையின் துணையுடன் தயாரிப்பதனையும் மேற்கொண்டு தலைமை அலுவலகத்திற்கு தொலைநகல் ஊடாகவும் இ–சேவை ஊடாகவும் முடிவுகளின் ஆவணங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டன. தலைமை அலுவலகத்தில் அந்த முடிவுகளின் ஆவணங்களை அட்டவணைப்படுத்தல், கணினிச் செய்நிரலின் துணையுடன் தயாரித்து சோதித்த பின்னர் தவிசாளரின் ஒப்பத்துடன் உத்தியோகபூர்வ முடிவுகளை வெளியிடுதல், மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு அனுப்புதல் மற்றும் ஊடக நிறுவனங்களுக்கு அனுப்புதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

## 16. நீதிமன்ற நடவடிக்கைகள்

SCபாராளுமன்றத் தேர்தலுக்கு நாள் குறிப்பது சம்பந்தமாக தாக்கல் செய்யப்பட்டிருந்த SC/FRA/292/2024 ஆம் இலக்க மற்றும் SC/FRA/295/2024 ஆம் இலக்க நியமனப் பத்திரங்கள் நிராகரிக்கப்பட்ட தொடர்பாக தாக்கல் செய்யப்பட்டிருந்த SC/Writ/11/24, SC/Writ/12/24, SC/Writ/13/24, SC/Writ/14/24, SC/Writ/15/24, SC/Writ/664/24 மற்றும் SC/Writ/666/24 இலக்க வழக்குகளை விசாரித்து இறுதித் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. நியமனப்பத்திரங்களைக் கையேற்றல் சம்பந்தமாக தாக்கல் செய்யப்பட்டிருந்த SC/FRA/296/2024 இலக்க வழக்கை விசாரித்து இறுதித் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

## 17. முழுமையான தேர்தல் முடிவு

6,863,186 (61.561%) வாக்குகளைப் பெற்றுக்கொண்ட தேசிய மக்கள் சக்தி கட்சி இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் 10 பாராளுமன்றத்தில் 141 ஆசனங்களை வென்று 18 தேசியப் பட்டியல் ஆசனங்களை தமதாக்கிக் கொண்டு இலங்கை அரசியல் வரலாற்றில் தனியொரு கட்சியாக பாராளுமன்றத்தில் தமதாக்கிக் கொண்ட அதிகூடிய எண்ணிக்கை ஆசனங்களை (159) வென்றெடுத்து இத்தேர்தலில் சிறப்பாக வெற்றியீட்டியது.

| கட்சி/ குழு | பெற்றுக்கொண்ட வாக்குகளின் எண்ணிக்கை மற்றும் சதவீதம் | | அரசியலமைப்பின் 96(4) மற்றும் 98 உறுப்புரையின் கீழ் தேர்தல் மாவட்ட ரீதியாக உரித்தாகும் உறுப்பினர்களின் எண்ணிக்கை | அரசியலமைப்பின் 96அ உறுப்புரையின் கீழ் உரித்தாகும் உறுப்பினர்களின் எண்ணிக்கை (தேசியப் பட்டியல் உறுப்பினர்களின் எண்ணிக்கை) | பெற்றுக் கொண்ட மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 6,863,186 | 61.56% | 141 | 18 | 159 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 1,968,716 | 17.66% | 35 | 5 | 40 |
| இலங்கை தமிழ் அரசுக் கட்சி | 257,813 | 2.31% | 7 | 1 | 8 |
| புதிய ஜனநாயக முன்னணி | 500,835 | 4.49% | 3 | 2 | 5 |
| ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுண | 350,429 | 3.14% | 2 | 1 | 3 |
| ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | 87,038 | 0.78% | 2 | 1 | 3 |
| சர்வஜன அதிகாரம் | 178,006 | 1.60% | 0 | 1 | 1 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 66,234 | 0.59% | 1 | 0 | 1 |
| ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி | 65,382 | 0.59% | 1 | 0 | 1 |
| அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் | 39,894 | 0.36% | 1 | 0 | 1 |
| அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் | 33,911 | 0.36% | 1 | 0 | 1 |
| சுயேச்சைக் குழு – 17 யாழ்ப்பாணம் | 27,855 | 0.25% | 1 | 0 | 1 |
| இலங்கை தொழிலாளர் கட்சி | 17,710 | 0.16% | 1 | 0 | 1 |
| மொத்தம் | 11,148,006 | 94.35% | 196 | 29 | 225 |

| பதிவுசெய்யப்பட்ட தேருநர்களின் எண்ணிக்கை | செல்லுபடியான வாக்குகளின் எண்ணிக்கை | நிராகரிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை | அளிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 17,140,354 | 11,148,006 (94.35%) | 667,240 (5.65%) | 11,815,246 (68.93%) |


**உசாத்துணை நூல்கள் :–**


1. இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பு
2. 1981 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க பாராளுமன்ற தேர்தல்கள் சட்டம்
3. 2023 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க தேர்தல் செலவினத்தை ஒழுங்குபடுத்துதல் சட்டம்
4. 'புள்ளடியின் பலம்' செய்திச்சஞ்சிகை – வெளியீடு – தேர்தல் ஆணைக்குழு – மலர் 04 இதழ்கள் 01 – 02, 2020
5. தேர்தல் தொடர்பாக தேர்தல் ஆணைக்குழு வெளியிட்ட வர்த்தமானி அறிவித்தல்கள், சுற்றறிக்கைகள், அறிவுறுத்தல்கள் மற்றும் ஊடக அறிவித்தல்கள்.

# விருது வென்ற தேர்தல் இ-சேவை




இந்நாட்டின் முன்னணி தகவல் தொழில்நுட்ப விருது விழாவான பிரித்தானிய கணினிச் சங்கத்தின் (BCS) இலங்கைப் பிரிவினால் 26 ஆவது தடவையாக ஒழுங்குசெய்யப்பட்ட தேசிய தகவல் தொழில்நுட்ப விருது – 2024 (National ACT Wwards – NBQSA 2024) விருது விழா 2024.10.23 ஆம் திகதி ஸ்ரீ ஜயவர்தனபுர Monarch Imperial இல் நடைபெற்றது. அதில் அரசதுறை அமைப்பொன்றுக்கு அந்த அரச நிறுவனத்தினால் அதன் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சூழலை அமைத்தல், போசித்தல் மற்றும் அபிவிருத்தி செய்வதற்காக மேற்கொண்ட ஒப்பற்ற சேவைகளுக்காக வழங்கப்படும் Public Sector Most Outstanding ICT Achievement Award இன் கீழ் உயர் விருது தேர்தல் ஆணைக்குழுவினால் அறிமுகப்படுத்தப்பட்ட தேர்தல் இ–சேவைக்கு வழங்கப்பட்டது.

அதேபோல், பொதுமக்களுக்கு மேம்பட்ட அரச சேவைகளை வழங்குதல் அல்லது பொதுச் சேவைகளை முன்னேற்றுவதற்கான டிஜிட்டல் செயல்முனைப்புகளுக்கு அர்ப்பணித்த ஒப்பற்ற தகவல் தொழில்நுட்பப் புத்தாக்கங்களுக்கான Digital Government in Public Sector and Government பிரிவின் கீழ் வழங்கப்பட்ட மிக உயர் விருதான வெள்ளி விருதும் இந்த விருது வழங்கல் விழாவின் போது தேர்தல் இ–சேவைக்கு வழங்கப்பட்டது.



# தேர்தல் செயன்முறையில் சமூக ஊடகங்களின் செல்வாக்கு:

## 2024 சனாதிபதித் தேர்தலிலும் பாராளுமன்றத் தேர்தலிலும் சமூக ஊடகங்கள் சம்பந்தமான முறைப்பாட்டு முகாமை பற்றிய பின்னாய்வு

**பியுமி ஆட்டிகல – பிரதி தேர்தல்கள் ஆணையாளர் தேர்தல் பிணக்குகளைத் தீர்த்தல்**
தேர்தல் ஆணைக்குழு

இன்று சமூக ஊடக பாவனை பொதுமக்கள் மத்தியில் பரம்பலடைந்திருப்பதன் காரணமாக தேர்தல்களின் மீது சமூக ஊடகங்களினால் ஏற்படுத்தப்படும் செல்வாக்கு பற்றி தேர்தல் ஆணைக்குழுவின் விசேட கவனம் ஈர்க்கப்பட்டது. அதற்கமைய சனாதிபதித் தேர்தலும் பாராளுமன்றத் தேர்தலும் தொடர்பாக வெளியிடப்பட்ட ஊடக வழிகாட்டிநெறிகளில், இணையம், இணையத்தளங்கள் மற்றும் சமூக ஊடக நிர்வாகிகள் பின்பற்றியொழுக வேண்டிய வழிகாட்டிநெறிகள் குறிப்பாக சேர்க்கப்பட்டிருந்தன. தேர்தல் காலப்பகுதியினுள் சமூக ஊடக நடத்தையைக் கண்காணிப்பதற்கும் சமூக ஊடக வலையமைப்புகளின் ஊடாக இடம்பெறும் தேர்தல் சட்ட மீறல்கள் குறித்த முறைப்பாடுகள் தொடர்பில் செயலாற்றுவதற்காக தேசிய தேர்தல் பிணக்குத் தீர்வு அலகின் கீழ் சமூக ஊடக கண்காணிப்பு அலகொன்று நிறுவப்பட்டது.

சமூக ஊடக அலகின் கண்காணிப்பு நடவடிக்கைகள் 2024 சனாதிபதித் தேர்தலுக்கு பெயர் குறித்த நியமனங்களைக் கோரி முடித்த தினத்திலிருந்தும் பாராளுமன்றத் தேர்தலுக்கு பெயர் குறித்த நியமனங்களைக் கோரி முடித்த தினத்திலிருந்தும் ஆரம்பமானது. சமூக ஊடக கண்காணிப்பு அலகு அதன் கண்காணிப்பு நடவடிக்கைகளை பின்வரும் சட்ட ஏற்பாடுகளுக்கும் வழிகாட்டிநெறிகளுக்கும் அமைய மேற்கொண்டது:

1. இலங்கையின் குடியரசு அரசியலமைப்பு.
2. 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சனாதிபதித் தேர்தல்கள் சட்டம்.
3. 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டம்.
4. 2007 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க சர்வதேச சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் சட்டம்.
5. அரசியலமைப்பின் 104ஆ(5)(அ) இன்கீழ் வெளியிடப்பட்ட ஊடக வழிகாட்டிகள் அடங்கிய அதிவிசேட வர்த்தமானியின் அட்டவணை 02 மூலம் இணையம், இணையத்தளங்கள், சமூக ஊடக வலைத்தளங்களுக்குரிய ஊடக வழிகாட்டிநெறிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.
6. அரசியலமைப்பின் 104ஆ(4)(அ) இன் கீழ் வெளியிடப்பட்ட அரச ஆதனங்களை சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலொன்றை நடாத்துவதற்கு தடங்கல் ஏற்படுகின்றவாறு ஈடுபடுத்திக்கொள்வதைத் தடுப்பதற்கான ஏற்பாடுகள் அடங்கிய அதிவிசேட வர்த்தமானி.
7. 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 8(8) ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்பட்ட ஒழுக்கநெறிக் கோவை அடங்கிய அதிவிசேட வர்த்தமானி.
8. சமூக ஊடக நிறுவனங்களினால் வெளியிடப்பட்டுள்ள அந்தந்த சமூக ஊடக வலையமைப்புக்குரிய சமூக வழிகாட்டிகள் (Community Guidelines/ Standards)

## இலங்கையில் சமூக ஊடக பாவனை


2024 இரண்டாம் காலாண்டுக்குரிய இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டுள்ள தரவுகளின்படி, இலங்கையில் இணைய சேவைப் பாவனையும் சமூக ஊடக பாவனையும் பற்றிய தகவல்கள் வருமாறு:

| தொலைபேசிப் பாவனையாளர்கள் | எண்ணிக்கை |
|---|---|
| தரவுச் சேவையுடன்கூடிய நிலையான தொலைபேசிப் பாவனையாளர்கள் | 3,428,893 |
| தரவுச் சேவையுடன்கூடிய செல்லிடத் தொலைபேசிப் பாவனையாளர்கள் | 29,004,516 |
| செல்லிடத் தொலைபேசிச் செறிவு (100 பேருக்கு) | 131, 5% |
| நிலையான Broadband பாவனையாளர்கள் | 2,747,749 |
| செல்லிட Broadband பாவனையாளர்கள் | 23,304,634 |

குறிப்பு 1

| Name of Social Media | No of Users |
|---|---|
| Facebook | 14,977,039 |
| YouTube | 14,476,931 |
| WhatsApp | 15,652,678 |
| Viber | 4,288,253 |
| Imo | 5,456,517 |
| Instagram | 9,426,191 |
| Snapchat | 3,649,587 |
| Tik Tok | 9,877,061 |

குறிப்பு 2




குறிப்பு 3

இலங்கையில் சமூக ஊடகங்களைக் கட்டுப்படுத்துவதற்கு நேரடியாக தொடர்புடைய சட்ட ஏற்பாடுகள் இல்லாமை காரணமாக இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் போலன்றி சமூக ஊகங்களின் கட்டுப்பாடு மிகவும் சிக்கலானதும் சிரமமளிப்பதுமாகும். ஆகையால், சமூக ஊடக வலைத்தள உரிமையாளர்களுடனும் நிர்வாகிகளுடனும் ஏற்படுத்திக்கொள்ளும் பரஸ்பர உடன்பாடுகளின் அடிப்படையில் அவற்றுக்குரிய மேற்கூறிய ஊடக வழிகாட்டிநெறிகளையும் ஏனைய ஏற்பாடுகளையும் அமுல்படுத்துவதற்காக

ஒவ்வொரு சமூக ஊடக வலைத்தள முகவர்களுடனும் உடன்பாடுகளை ஏற்படுத்திக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அதன்படி, Meta சமூக ஊடக வலைத்தள முகவர்களுடன் நேருக்கு நேரும் Zoom தொழில்நுட்பத்தின் ஊடாக கலந்துரையாடல்களும் நடைபெற்றன. தேர்தல் கண்காணிப்பு அமைப்புகளுடனும் Meta சமூக வலைத்தள முகவர்களுடனும் கலந்துரையாடலொன்று ஒழுங்குசெய்யப்பட்டன. சமூக ஊடக பதிவிடல்களை நீக்குவதற்காக முறைப்பாடு செய்யும்போதும், நீக்கும்போதும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் விடயங்கள் குறித்த கருத்துக்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டன. வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு தேர்தல் கண்காணிப்புக் குழுக்கள் சமூக ஊடக கண்காணிப்பு அலகின் நடவடிக்கைகள் இடம்பெறும் விதத்தைக் கண்காணிப்பதற்கு வருகை தந்தனர். அலகின் நடவடிக்கைகள் குறித்து அவர்கள் அறிவுறுத்தப்பட்டனர்.

அவ்வாறு சமூக ஊடக வலைத்தள முகவர்களுடனும் சமூக ஊடக கணக்கு நிர்வாகிகளுடனும் முன் உடன்பாடுகள் ஏற்படுத்திக்கொள்ளப்பட்டபோதும், அனைத்து முகவர்களிடமிருந்தும் எதிர்பார்த்த நேர்ப்படியான பதில்குறிப்புகள் கிடைக்கவில்லை. Meta, TikTok ஆகிய இரு நிறுவனங்களும் சாதக பதிலளித்திருந்தன. முறைப்பாடு செய்யப்பட்ட பதிவிடல்களில் 77% நீக்கப்பட்டுள்ளதுடன், அவற்றில் 95% Meta நிறுவனத்தினாலும் 5% TikTok நிறுவனத்தினாலும் நீக்கப்பட்டிருந்தன. முறைப்பாடு செய்யப்படும் பதிவிடல்களை நீக்காமலிப்பதற்கு அடிப்படையாக அமைந்த காரணங்களாக பின்வரும் விடயங்கள் முக்கியமாக அவதானிக்கப்படுகின்றன.

1. சமூக ஊடக வலைத்தளங்களினால் அவற்றுக்கு தனிவேறாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள சமூக வழிகாட்டல்களின் (Community Guidelines) மீறல்களுக்கு கூடுதல் முன்னுரிமை அளித்தல்,
2. ஒவ்வொரு சமூக ஊடக வலைத்தளத்தின் சமூக வழிகாட்டல்களுக்கு (Community Guidelines) இடையில் நிலவும் வித்தியாசங்கள்,
3. சமூக ஊடக வலைத்தளங்களில் ஏற்புடைத்தாகும் சமூக வழிகாட்டல்களுக்கு வழங்கப்பட்டுள்ள வரைவிலக்கணங்கள்ஃ பொருள்களின் உள்ளூர் அளவுகோல்களுடனான முரண்பாடுகள், உதாரணமாக Facebook சமூக ஊடக வலைத்தளத்தில் சமூக வழிகாட்டல்களின் (Community Guidelines) படி வெறுப்பூட்டும் பேச்சுக்கள் என்பவை இனப்பிரிவு, நாட்டினம், தேசியம், மத சார்புப்போக்குகள், சாதி, பால்நிலை, உடல் இயலாமைகள், பாரதூரமான நோய்கள் முதலியவற்றை விமர்சிக்கும் கூற்றுக்களாகும்.

   எவ்வாறாயினும், சனாதிபதித் தேர்தல்கள் சட்டம், பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டம் அல்லது இடைநேர்விளைவான சட்டங்களினுள் வெறுப்பூட்டும் பேச்சுக்கள் என்பன பற்றிய குறிப்பான வரைவிலக்கணங்களைக் காண முடியவில்லை.

   Facebook சமூக வழிகாட்டல் வரைவிலக்கங்களுடன் எடுக்கக்கூடிய விதமான வெறுப்பூட்டும் பேச்சுக்கள் தேர்தல் காலப்பகுதியில் எந்தவொரு திறத்தவரினாலும் மேற்கொள்ளப்படுமென்று எதிர்பார்க்க முடியாது. அதற்குப் பதிலாக திறத்தவர்களுக்கு இடையில் வெறுப்பூட்டும்/எதிர்வாத உணர்வுகள் ஏற்படும் அரசியல் சார்பான கருத்தியல் தன்மைவாய்ந்த கருத்துக்களை வெளியிடும் சந்தர்ப்பங்களை அவதானிக்கலாம்.

   2024 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க நிகழ்நிலைக் காப்புச் சட்டத்தின் 12 ஆம் பிரிவினால் விரிவான பொருள்கோடலொன்றை வழங்கி பொய்யான கூற்றுக்களின் தொடர்பாடல் மூலம் வெவ்வேறு வகுப்பினர்களுக்கு இடையில் வெறுப்பையும் பகை உணர்வையும் ஏற்படுத்துவது தவறொன்றாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும், சட்டத்தின் ஆங்கிலமொழிப் பிரதியில் வெறுப்பூட்டும் பேச்சுக்களைக் குறிப்பிடுவதற்காக Hostility என்ற பதம் கையாளப்பட்டுள்ளது. சமூக ஊடக வலைத்தளங்களுக்கான வழிகாட்டல்களில் குறிப்பிடப்படும் hate என்ற பதப் பிரயோகம் சட்டத்தின் கருத்துடன் எவ்வாறு பொருந்தும் என்பதை அனுமானிக்க முடியாது.

   எவ்வாறாயினும், 2024 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க நிகழ்நிலைக் காப்பு பற்றிய சட்டத்தின் கீழ் முறைப்பாடுகளைச் செய்வது தொடர்பில் சமூக ஊடக வலைத்தள நிறுவனங்கள் அந்தளவு இணக்கம் தெரிவிக்கவில்லையாதலால், ஏனைய ஏற்பாடுகளின் கீழ் முறைப்பாடு செய்வதற்காக முன்னுரிமையளிக்கப்பட்டது.

4. சில ஊடக வலையமைப்புகளில் (Meta, YouTube, TikTok) முறைப்பாடுகளைச் சமர்ப்பிப்பதற்காக தேர்தல் ஆணைக்குழுவுக்கு சிறப்பான அனுகல்கள் ஏற்படுத்திக்கொடுக்கப்பட்டிருந்தது. அதில் விரிவான விளக்கங்களோடு இணைப்புகளைச் சமர்ப்பிப்பதற்கும் வாய்ப்பளிக்கப்பட்டிருந்தது. எனினும், ஏனைய ஊடக வலையமைப்புகள் (உதாரணமாக:x) அவ்வாறான விசேட அனுகல்களை வழங்கியிருக்கவில்லையாதலால், பொதுவான பயனர்கள் போல், குறித்த சமூக ஊடகங்கள் வாயிலாக குறித்துரைக்கப்பட்டுள்ள வரையறுத்த தேர்வுகள் (option) மூலம் மாத்திரம் முறைப்பாடுகளைச் சமர்ப்பிக்க நேரிட்டது.
5. சமூக ஊடகங்களில் உயர்மட்டத்தில் பிரபலமான பதிவிடல்களை (post) ஒரே தடவையில் நீக்குவதற்கு தூண்ட முடியாதிருத்தல்.

மேற்கூறிய காரணங்களைத் தவிர பின்வரும் விடயங்களும் சமூக ஊடக/இணைய பதிவிடல்களை நீக்குவது சிரமமானதாக அமைவதற்குக் காரணமாக அமைந்துள்ளது.

1. பயனர் ஒருவரின் பதிவொன்று நீக்கப்பட்டபோதும், வேறு பயனர்கள் பலரால் தமது கணக்குகள் மூலம் அது பகிரப்பட்டிருத்தல்.
2. நீக்கப்பட்ட பதிவொன்றை வேறு விதத்தில் மீண்டும் பகிரக்கூடியதாக இருத்தல்.
3. சமூக ஊடகங்களில் மூடிய குழுக்களினுள் (closed group) பகிரப்படும் பதிவுகளில் இடையீடு செய்ய முடியாதிருத்தல்.
4. சமூக ஊடகங்களினுள் பகிரப்படும் சில பதிவுகள் சமூக ஊடகங்கள் அல்லாத வேறு நிகழ்நிலைக் குழுமங்களினுள் பகிரப்படும்போது அதில் இடையீடு செய்ய முடியாதிருத்தல்.
5. இந்த பதிவிடல்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கும் வாய்ப்பு வரையறுக்கப்பட்டதாக இருத்தல்.
6. பதிவுகளை நீக்குவதற்கு குறிப்பிடத்தக்க காலம் எடுப்பதுடன், அக்காலத்தினுள் ஏராளமான பயனர்களிடையே பரம்பியிருத்தல்.

# சமூக ஊடக கண்காணிப்பு அலகுக்கு முறைப்பாடுகளை அனுப்புதல்

சமூக ஊடகங்களில் தேர்தல் சட்ட மீறல் குறித்த முறைப்பாடுகளை றுாயவளயுீ’ நு அயடை’ கடிதம், தொலைபேசி ஊடாகவும் நேரில் வந்தும் சமர்ப்பிக்க வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டிருந்தது. அதன்படி அரசியல் கட்சிகள், தேர்தல் கண்காணிப்புக் குழுக்கள், அரச சார்பற்ற அமைப்புக்கள் மற்றும் தனிநபர்களினாலும் தேர்தல் சட்டங்களையும் ஊடக வழிகாட்டிநெறிகளையும் மீறும் சமூக ஊடக பதிவிடல்களும் வேறு இணைய பதிவிடல்களும் குறித்த முறைப்பாடுகள் சமர்ப்பிக்கப்பட்டன.

அவ்வாறு கிடைக்கப்பெற்ற அனைத்து முறைப்பாடுகளையும் சமூக ஊடக அலகின் அலுவலர்களினால் பின்வரும் சட்டங்களுடனும் வழிகாட்டல்களுடனும் மீண்டும் பரீட்சித்து அவற்றை மீறும் பதிவிடல்கள் குறித்து சம்பந்தப்பட்ட சமூக ஊடக வலையமைப்பு நிறுவனங்களுக்கு அறிக்கையிடப்பட்டது. அதேபோல், இது சம்பந்தமாக கிடைக்கப்பெற்ற பல்வேறு விசாரணைகளுக்கு தேசிய தேர்தல் முகாமைத்துவ நிலையத்திற்கு இணைக்கப்பட்ட உதவித் தெரிவத்தாட்சி அலுவலரொருவர் மூலம் துரிதமாக பதிலளிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

இவ்வாறு கிடைக்கப்பெற்ற முறைப்பாடு செய்யப்பட்ட சமூக ஊடக பதிவிடல்கள் குறித்த சமூக வழிகாட்டல்கள் உள்ளிட்ட மேற்குறிப்பிட்ட ஏனைய ஏற்பாடுகளுக்கு அமைய முக்கிய பல வகைமீடுகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டன:


1. வெறுப்பூட்டும் பேச்சுக்கள் ஹீரயவந ளிநநஉா
2. பிழையான தகவல்கள் ஆளைைகெழசஅயவழைெ
3. பொய்யான செய்திகள் (கயடளந நெறள)
4. அந்தரங்கமான விடயங்களை அடிப்படையாகக்கொண்ட பழிப்புரைகள்
5. தேர்தல் பிரச்சாரங்களுக்கு சிறுவர்களை ஈடுபடுத்திக்கொள்ளல்
6. அமைதி காலப்பகுதியினுள் பதிவிடல்கள் (பணம் செலுத்தி வெளியிடப்படும் அறிவித்தல்கள் உட்பட)
7. 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்திலும் 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்திலும் குறிப்பிடப்படும் ஏற்பாடுகளுக்கு முரணான உள்ளடக்க விடயங்கள்.

குறிப்பிட்ட வகைமீட்டின்படி பின்வருமாறு சம்பந்தப்பட்ட சமூக ஊடக நிறுவனங்களுக்கு அறிக்கையிடல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சனாதிபதித் தேர்தல் தொடர்பான முறைப்பாடுகள்

| | |
|---|---|
| வெறுப்பூட்டும் பேச்சுக்கள் | 713 |
| பிழையான தகவல்கள் | 389 |
| பொய்யான செய்திகள் | 231 |
| பிரச்சார நடவடிக்கைகளுக்கு சிறுவர்களை ஈடுபடுத்திக்கொள்ளல் | 13 |
| 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்திலும் 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்திலும் குறிப்பிடப்படும் ஏற்பாடுகளுக்கு முரணான உள்ளடக்க விடயங்கள். | 664 |

குறிப்பு 4





குறிப்பு 5

பாராளுமன்றத் தேர்தல் தொடர்பான முறைப்பாடுகள்

| | |
|---|---|
| வெறுப்பூட்டும் பேச்சுக்கள் | 306 |
| பிழையான தகவல்கள் | 188 |
| பொய்யான செய்திகள் | 83 |
| பிரச்சார நடவடிக்கைகளுக்கு சிறுவர்களை ஈடுபடுத்திக்கொள்ளல் | 56 |
| அந்தரங்க விடயங்களை அடிப்படையாகக்கொண்ட பழிப்புரைகள் | 494 |
| 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பாராளுமன்ற தேர்தல்கள் சட்டத்தில் குறிப்பிடப்படும் ஏற்பாடுகளுக்கு முரணான உள்ளடக்க விடயங்கள். | 844 |
| அமைதி காலப்பகுதியினுள் பதிவிடல்கள் (பணம் செலுத்தி வெளியிடப்படும் அறிவித்தல்கள் உட்பட) | 1306 |

குறிப்பு 6




குறிப்பு 7

இதுதவிர, பின்வரும் துறைகள் தொடர்பில் பகிரப்பட்ட சமூக ஊடக பதிவிடல்கள் குறித்த முறைப்பாடுகள் அதிக எண்ணிக்கையில் முன்வைக்கப்பட்டன என்பதும் அவதானிக்கப்படுகிறது.

1. வேட்பாளர்களதும் குடும்பங்களதும் அங்கத்தவர்கள், நெருக்கமானவர்கள் பற்றிய உண்மைக்குப் புறம்பான/ திரிபுபடுத்திய தகவல்களைப் பகிரல்.
2. 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டம் உள்ளிட்ட சட்ட ஏற்பாடுகளுக்கு முரணான பதிவிடல்கள்.
3. வெறுப்பூட்டும்/ எதிர்ப்பு உணர்வுகளைக் கிளறும் பதிவிடல்கள்.

2024.09.18 ஆம் திகதி பி.ப. 12.00 மணி முதல் 2024.09.21 ஆம் திகதி பி.ப. 4.00 மணி வரையான அமைதி காலப்பகுதியினுள் சமூக ஊடகங்களில் வெளியாடும் தேர்தல் தொடர்பான பதிவிடல்களை நீக்குவதற்காக துரித நடவடிக்கை எடுப்பதற்கு Meta நிறுவனம் இணங்கியது. 2024.08.15 ஆம் திகதி முதல் 2024.09.21 ஆம் திகதி பி.ப. 04.00 மணி வரையான காலப்பகுதியினுள் நீக்கப்பட்ட பதிவிடல்களுக்கு கிட்டிய எண்ணிக்கையானவை அமைதி காலப்பகுதியினுள் நீக்கப்பட்டன.

| | |
|---|---|
| அமைதி காலப்பகுதியினுள் சமூக ஊடக நிறுவனங்களினால் நீக்கப்பட்ட இடையிணைப்பிகள் (links) | 751 |
| ஒட்டுமொத்த தேர்தல் காலப்பகுதியினுள் சமூக ஊடக நிறுவனங்களினால் நீக்கப்பட்ட இடையிணைப்பிகள் (links) | 872 |

குறிப்பு 8

2024.11.11 ஆம் திகதி நள்ளிரவு 12.00 மணியிலிருந்து 2024.11.14 ஆம் திகதி பி.ப. 04.00 மணி வரையான அமைதி காலப்பகுதியினுள் சமூக ஊடகங்களில் வெளியான தேர்தல் தொடர்பான பதிவிடல்களை நீக்குவதற்கு துரித நடவடிக்கை எடுப்பதற்கு Meta நிறுவனம் இணங்கியது. அக்காலப்பகுதியினுள் அறிக்கையிடப்பட்ட பதிவிடல்களும் 2290 பணம் செலுத்திய விளம்பரங்களில் 1822 விளம்பரங்களும் நீக்கப்பட்டன.

| | |
|---|---|
| அமைதி காலப்பகுதியினுள் சமூக ஊடக நிறுவனங்களினால் நீக்கப்பட்ட இடையிணைப்பிகள் (links) | 1822 |
| ஒட்டுமொத்த தேர்தல் காலப்பகுதியினுள் சமூக ஊடக நிறுவனங்களினால் நீக்கப்பட்ட இடையிணைப்பிகள் (links) | 2515 |

குறிப்பு 9

2024.08.15 ஆம் திகதியிலிருந்து 2024.09.21 ஆம் திகதி வரையான காலப்பகுதியினுள் சமூக ஊடக அலகிற்கு தேர்தல் சட்டங்கள், ஊடக வழிகாட்டிநெறிகள் மற்றும் வேட்பாளர்களின் ஒழுக்கநெறிகள் மீறப்பட்ட சம்பவங்கள் தொடர்பான 2,877 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன. அலகின் அலுவலர்கள் மேற்கொண்ட சோதிப்புகளை அடுத்து தேர்தல் சட்டங்கள், ஊடக வழிகாட்டிநெறிகள், வேட்பாளர்களின் ஒழுக்கநெறிகள், சமூக ஊடக வலையமைப்புகளின் சமூக வழிகாட்டல்கள் (Community Guidelines) என்பவற்றை மீறுவனவாக அடையாளம் காணப்பட்ட 2,010 பதிவிடல்கள் பற்றி அறிக்கையிடப்பட்டது.

2024.08.15 ஆம் திகதி பி.ப. 12.00 மணியிலிருந்து 2024.09.21 ஆம் திகதி நள்ளிரவு 12.00 மணி வரையான காலப்பகுதியினுள் சமூக ஊடகங்களுடன் சம்பந்தப்பட்ட ஒட்டுமொத்த தேர்தல் முறைப்பாடுகள்

| | |
|---|---|
| சமூக ஊடக நிறுவனங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்ட ஒட்டுமொத்த இடையிணைப்பிகள் (links) | 2010 |
| சமூக ஊடக நிறுவனங்களினால் வெற்றிகரமாக நீக்கப்பட்ட இடையிணைப்பிகள் | 872 |
| சமூக ஊடக நிறுவனங்களினால் நீக்குவது நிராகரிக்கப்பட்ட இடையிணைப்பிகள் | 201 |
| சம்பந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து பின்தொடராய்வுத் தகவல்கள் கிடைக்க வேண்டியிருந்த இடையிணைப்பிகள் | 937 |

குறிப்பு 10

2024.10.11 ஆம் திகதியிலிருந்து 2024.11.14 ஆம் திகதி வரையான காலப்பகுதியினுள் சமூக ஊடக அலகிற்கு தேர்தல் சட்டங்கள், ஊடக வழிகாட்டிநெறிகள், வேட்பாளர்களின் ஒழுக்கநெறிகளை மீறிய சம்பவங்கள் பற்றி கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளும் அலகினால் அடையாளம் காணப்பட்ட 6524 மீறல்களும் காணப்பட்டன. அலகின் அலுவலர்கள் மேற்கொண்ட சோதிப்புகளை அடுத்து தேர்தல் சட்டங்கள், ஊடக வழிகாட்டிநெறிகள், வேட்பாளர்களின் ஒழுக்கநெறிகள், சமூக ஊடக வலைத்தளங்களில் சமூக வழிகாட்நெறிகளை (Community Guidelines) மீறுவனவாக அடையாளம் காணப்பட்ட 3277 பதிவிடல்கள் பற்றி அறிக்கையிடப்பட்டது.

2024.10.11 ஆம் திகதி பி.ப. 12.00 மணியிலிருந்து 2024.11.14 ஆம் திகதி நள்ளிரவு 12.00 மணி வரையான காலப்பகுதியினுள் சமூக ஊடகங்களுடன் சம்பந்தப்பட்ட ஒட்டுமொத்த தேர்தல் முறைப்பாடுகள்

| | |
|---|---|
| சமூக ஊடக நிறுவனங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்ட ஒட்டுமொத்த இடையிணைப்பிகள் | 3277 |
| சமூக ஊடக நிறுவனங்களினால் வெற்றிகரமாக நீக்கப்பட்ட இடையிணைப்பிகள் | 2515 |
| சமூக ஊடக நிறுவனங்களினால் நீக்குவது நிராகரிக்கப்பட்ட இடையிணைப்பிகள் | 129 |
| சம்பந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து பின்தொடராய்வுத் தகவல்கள் கிடைக்க வேண்டியிருந்த இடையிணைப்பிகள் | 633 |

குறிப்பு 11

2020.08.02 ஆம் திகதியிலிருந்து 2020.08.05 ஆம் திகதி வரையான அமைதி காலப்பகுதியினுள் சமூக ஊடகங்களின் துஷ்பிரயோகம் சம்பந்தமான முறைப்பாடுகளின் பொழிப்பு பின்வருமாறு

| **திகதி** | **2020.08.02 ஆம் திகதியிலிருந்து 2020.08.05 ஆம் திகதி வரையான அமைதி காலப்பகுதி** | | **மொத்த எண்ணிக்கை** |
|---|---|---|---|
| **வகை** | **அறிவித்தல்கள்** | **தேர்தல் சட்ட மீறல்களாக அடையாளம் காணப்பட்ட முறைப்பாடுகள்** | |
| Facebook நிறுவனத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை | 2873 | 1766 | 4639 |
| நீக்கப்பட்டவற்றின் எண்ணிக்கை | 2873 | 1732 | 4605 |
| சதவீதம் | 100% | 98% | 99% |

அதன்படி, மேற்குறிப்பிட்ட மூன்று தேர்தல்களுக்கும் உரிய எண்ணிக்கை ரீதியான பெறுமானங்களைக் கவனத்திலெடுக்கும்போது அமைதி காலப்பகுதியினுள் சமூக ஊடக நிறுவனங்கள் பாராட்டத்தக்க பதில்குறிப்புகளைக் காட்டி முறைப்பாட்டு முகாமைத்துவத்திற்கு மிக உயர்ந்த ஒத்துழைப்பை வழங்குவதை அவதானிக்கலாம்.

## சவால்கள்

முறைப்பாடு செய்யப்படும் பதிவிடலொன்றின் மூலம் மீறப்பட்டுள்ள உள்நாட்டுச் சட்டத்தை உரிய பிரிவுகளுடன் காட்டுமாறு சமூக ஊடக வலையமைப்பு நிறுவனங்கள் கோருகின்றனபோதும், மேற்குறிப்பிட்டுள்ளவாறு சமூக ஊடகங்களில் இடம்பெறும் பதிவிடல்களின் வகைப்பாடு பற்றி குறிப்பான வரைவிலக்கணங்கள் உள்நாட்டுச் சட்டத்தில் காணப்படவில்லை என்பது முக்கிய ஒரு பிரச்சினையாகும்.

குறிப்பாக, சமூக ஊடக வலைத்தளங்களில் சமூக வழிகாட்டல்களுக்கு (Community Guidelines) இடையே முக்கிய இடம் வகிக்கும் வெறுப்பூட்டும் பேச்சுக்களுக்கு குறிப்பான பொருள் வரையறையை இச்சட்டங்களில் காண முடியவில்லை. சமூக வழிகாட்டிநெறிகளில் காணப்படும் வரைவிலக்கங்களில் வெறுப்பூட்டும் பேச்சுக்களாக கருதப்படும் இனம், மதம் என்பவற்றைத் தாக்கும் பதிவிடல்கள் பொதுவாக இன்று தேர்தல் காலப்பகுதியில் அவதானிப்பது சிரமமானது. இதன் காரணமாக பொது வழக்கப்படி குரோத உணர்வுகளை ஏற்படுத்துமென்று கருதப்படும் மேற்கூறிய வரையறுக்கப்பட்ட வரைவிலக்கங்களில் அடங்காத பதிவிடல்களை நீக்கிக்கொள்வது சிரமமானதே.

தேர்தல் ஆணைக்குழு வெளியிடும் ஊடக வழிகாட்டிநெறிகளுக்கு சட்டரீதியான தத்துவமில்லாத காரணத்தாலும் சில சந்தர்ப்பங்களில் ஊடக வழிகாட்டிநெறிகளின் மீறல்கள் பாரதூரமானவையாகக் கருதப்படுவதில்லை.

ஆகையால், ஊடக வழிகாட்நெறிகளை வகுத்தமைக்கும்போது சமூக ஊடகங்களின் சமூக வழிகாட்நெறிகளை பரவலாக உள்ளடக்கும் வகையில் வழிகாட்டிநெறிகளைத் தயாரிப்பது மிக உகந்ததென்று அவதானிக்கப்படுகிறது.

**இப்பிரச்சினைகளை நிர்வகிப்பதற்காக பின்வரும் யோசனைகள் முன்வைக்கப்படுகின்றன:-**

1. **அரசியலமைப்பின் 104ஆ(5)(அ) உட்பந்தியில் சமூக ஊடகங்களுக்கான வழிகாட்டிநெறிகளைத் தயாரிப்பதற்கும் உரிய ஏற்பாடுகளை உட்சேர்த்தல்.**
2. **ஊடக வழிகாட்டிநெறிகளைத் தயாரிக்கும்போது சமூக ஊடக வலைத்தளங்களின் சமூக வழிகாட்டிநெறிகளுடன்** (Community Standards/ Guidelines) **ஒத்திசையும் விதத்தில் அவற்றைத் தயாரித்தல்.**
3. **ஊடக வழிகாட்டிநெறிகளும் ஒழுக்கநெறிகளும் மீறப்படுவதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கக்கூடிய விதத்தில் சட்ட ஏற்பாடுகளைச் செய்தல்.**

அதேபோல், பல்வேறு பங்கீடுபாட்டாளர்களினால் அனுப்பிவைக்கப்பட்ட முறைப்பாடுகளில் சமூக ஊடக சமூக வழிகாட்டிநெறிகளையும் ஊடக வழிகாட்டிநெறிகளையும் ஒழுக்கநெறிகளையும் சட்ட ஏற்பாடுகளையும் மீறுகின்ற முறைப்பாடுகளாக, அவற்றில் அரைப்பங்கு மாத்திரமே அவதானிக்கப்பட்டன. எவ்வாறாயினும், கிடைக்கப்பெறுகின்ற பெரும் எண்ணிக்கையான முறைப்பாடுகளைக் கவனிக்க நேரிடுவதன் காரணமாக சமூக ஊடக அலகினால் சமூக ஊடகங்களைப் புலனாய்வுசெய்து நியாயமான ஒரு தேர்தலை நடாத்துவதற்கு தடங்கலாக அமைகின்ற சமூக ஊடக பதிவிடல்களை அடையாளம் காண்பது மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

சமூக ஊடக பதிவிடல்களைப் புலனாய்வு செய்வதற்கும் அடையாளம் காண்பதற்கும் உருவாக்கப்பட்ட மென்பொருள்களை அலகில் உபயோகிக்க பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்குமாயின், பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய பதிவிடல்களை இலகுவாக அடையாளம் காணலாம். அதன் மூலம் திறவுச் சொற்களை (key words) உபயோகித்து ஒரு குறுகிய காலத்தினுள் பாதிப்பான சமூக ஊடக பதிவிடல்களை அடையாளம் காணலாம் என்பதோடு, அது தேர்தல் ஆணைக்குழுவின் சமூக ஊடக கண்காணிப்பு நோக்கங்களை ஈடேற்றிக்கொள்வதற்கு உதவும் என்று அவதானிக்கப்படுகிறது.

தற்போதுள்ள சட்ட சட்டகத்தினுள் நியாயமான, சம வாய்ப்புகளை போட்டியிடும் அனைத்துக் கட்சி வேட்பாளர்களுக்கும் வழங்குவதற்கு தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவம் மிகச் சிறப்பான செயற்பணியொன்றை ஆற்றுவதோடு, புத்தாக்க முறைகளை அனுசரித்து இடம்பெறும் சமூக, பொருளாதார நிலைமாற்றங்களுக்கு இயைய அதனை மேற்கொள்வது இன்றியமையாததாகும். அதன்மூலம் ஏற்படக்கூடிய சமூக அனுகூலங்களை இதனை விடப் பரந்ததொரு சமூக உரையாடலை உருவாக்குவதற்கு அடிப்படையாகக் கொள்ள வேண்டுமென்பது இந்த கண்காணிப்பில் அடங்கியுள்ளது.

(சமூக ஊடக கண்காணிப்புக்கு உதவிய இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் பிரதிப் பணிப்பாளர் திரு. வை.எஸ்.பீ.பீ.குணரத்ன, காணி உரித்து நிர்ணயத் திணைக்களத்தின் உதவி ஆணையாளர்களான திரு. தரிந்து ஜயரத்ன, செல்வி கே.எச்.எஸ்.யூ.யசநாயக்க, பாதுகாப்பு அமைச்சின் உதவிப் பணிப்பாளர் திரு. டீ.எம்.ரி.ஜீ.ரசிக்க சமரகோன், தொழில் திணைக்களத்தின் உதவி ஆணையாளர் திருமதி பி.நிரோசினி ஆகியோரால் தயாரிக்கப்பட்ட அறிக்கையின் துணையுடன்)

# தேருநர் இடாப்பு மீளாய்வு - 2025

2024 ஆம் ஆண்டின் பிரதான தேருநர் இடாப்பு, 2024(1), 2024(2), 2024(3) குறைநிரப்பு தேருநர் இடாப்புக்கள் அல்லது அவற்றின் பாகங்களின் பிரதிகள், பின்வரும் அலுவலகங்களில் பதிவுசெய்யும் அலுவலர்களினால் காட்சிப்படுத்தப்படும்:

| தேருநர் இடாப்புக்களின் அல்லது அவற்றின் பாகங்களின் பிரதிகள் காட்சிப்படுத்தப்படும் அலுவலகங்கள் | காட்சிப்படுத்தப்படும் இடாப்புக்கள் அல்லது அவற்றின் பாகங்கள் |
|---|---|
| மாவட்ட தேர்தல்கள் அலுவலகங்களில் | தேர்தல் மாவட்டத்திற்குஃ நிர்வாக மாவட்டத்திற்குரிய செல்லுபடியான தேருநர் இடாப்பின் முழுமையான பிரதி |
| கிராம அலுவலர் அலுவலகங்களில் | கிராம அலுவலர் பிரிவுகளில் செல்லுபடியான தேருநர் இடாப்புக்களின் பாகங்கள் |

இதன்படி, யாதேனும் தேர்தல் மாவட்டமொன்றின் தேருநர் ஒருவராவதற்கு தகைமை பெற்றுள்ள ஆள் ஒவ்வொருவருக்கும் தனது பெயர் மேற்கூறிய இடங்களில் காட்சிப்படுத்தப்படும் தேருநர் இடாப்புக்களை சோதனையிட்டு உறுதிப்படுத்திக்கொள்ள முடியும். இதுதவிர தேர்தல் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் சஞ்சரித்து சோதனையிடுவதன் மூலமும் இதிலுள்ள QR குறியீட்டை வருடுவதன் (scan) மூலமும் சோதனையிடலாம்.

2025 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பு மீளாய்வை பின்வருமாறு மேற்கொள்வதற்கு தேர்தல் ஆணைக்குழு தீர்மானித்துள்ளதென்பது பொதுமக்களுக்கு அறிவிக்கப்படுகிறது.

கணக்கெடுப்பு அலுவலர் ஒவ்வொரு வீட்டுக்கும் வருவதில்லை. வேளைக்கேற்ப 2024 ஒருங்கிணைந்த தேருநர் இடாப்பில் திருத்தமொன்றை மேற்கொள்ள வேண்டிய சந்தர்ப்பங்களில் அதாவது, தமது குடித்தனத்தின் கீழ் 2025 ஒருங்கிணைந்த பட்டியலில் ஒரு பெயரை/பெயர்களை உட்சேர்த்தல் அல்லது நீக்குதல் இடம்பெறுமாயின், அதேபோல் செல்லுபடியான இடாப்பில் குறிப்பிடப்படும் பெயரில், தேசிய அடையாள அட்டை இலக்கத்தில், குடித்தன இலக்கத்தில் திருத்தமொன்றை மேற்கொள்ள வேண்டியிருப்பின் மாத்திரம் வாக்கெண்ணும் அலுவலரைச் சந்தித்து உரிய தகவல்களை வழங்க வேண்டும். எந்தவொரு திருத்தத்தையும் மேற்கொள்ள வேண்டிய தேவை இல்லாதபோது தேருநர் ஒருவராக 2024 செல்லுபடியான தேருநர் இடாப்பில் பதிவுசெய்யப்பட்டிருந்த முகவரியின் கீழ் பதிவுசெய்வதற்கு செயலாற்றப்படும். அதற்கு எந்தவொரு படிவத்தையும் குடும்பத் தலைவர் பூர்த்திசெய்ய வேண்டிய தேவையில்லை.

ஆள் எவரும் 2024 ஆம் ஆண்டில் பதிவுசெய்யப்படவில்லையெனில் அல்லது 18 வயது பூர்த்தியடைவதன் மேல் முதல் தடவையாக தேருநர் ஒருவராக பதிவுசெய்வதாயின் அல்லது பதிவை மாற்றுதல் அல்லது பிறிதொரு காரணத்தால் 2025 ஆம் ஆண்டில் தேருநர் ஒருவராக பதிவுசெய்வதற்கு கிராம அலுவலரிடமிருந்து அல்லது தேர்தல் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்படும் 2025/ER படிவமொன்றைப் பூர்த்திசெய்து வாக்கெண்ணும் அலுவலருக்கு ஒப்படைக்கவும். 2025/ER படிவத்தில் மேலதிக விபரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 2025 ஆம் ஆண்டுக்காகத் தயாரிக்கப்படும் குறைநிரப்பு தேருநர் இடாப்பின் காலப்பகுதிகள்

| குறைநிரப்பு தேருநர் இடாப்பு | 18 வயதைப் பூர்த்தி செய்ய வேண்டிய காலப்பகுதி | பிறந்த திகதி |
|---|---|---|
| 2025 (1) | 2025.02.01 இலிருந்து 2025.05.31 வரை | 2007.02.01 இலிருந்து 2007.05.31 வரை |
| 2025 (2) | 2025.06.01 இலிருந்து 2025.09.30 வரை | 2007.06.01 இலிருந்து 2007.09.30 வரை |
| 2025 (3) | 2025.10.01 இலிருந்து 2026.01.31 வரை | 2007.10.01 இலிருந்து 2008.01.31 வரை |




2024 சனாதிபதித் தேர்தல் தொடர்பாக தேர்தல்கள் செயலகத்தில் வேட்பாளர்களினால் பெயர் குறித்த நியமனங்களைக் கையளிக்கும் விசேட நிகழ்வு - 2024.08.15



2024 சனாதிபதித் தேர்தல் தொடர்பாக பெயர் குறித்த நியமனங்களைக் கையளித்த வேட்பாளர்களுக்கு வானலை காலத்தை ஒதுக்கிக்கொடுக்கும் நிகழ்வு - 2024.08.22



வாக்காளர்களை அறிவூட்டுவதற்காக தயாரிக்கப்பட்ட பதாகைகளை வெளியிடும் நிகழ்வு - 2024.09.18




அரச ஆதனங்களைத் துஷ்பிரயோகம் செய்வதைத் தடுத்தலும் தேர்தல் சட்டங்களை வலுவாக்கம் செய்தலும் குறித்து அரச கூட்டுத்தாபனங்கள்/ நியதிச்சட்ட நிறுவனங்கள்/ அரச கம்பனிகளின் தலைவர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடல்



ANFREL Observers அமைப்புடன் நடைபெற்ற விசேட கலந்துரையாடல் - 2024.09.20




Commonwealth Observers அமைப்புடன் நடைபெற்ற விசேட கலந்துரையாடல் - 2024.09.20



சனாதிபதித் தேர்தல் தொடர்பாக வெளிநாட்டு தேர்தல் கண்காணிப்பு அமைப்புகளுடன் நடைபெற்ற கலந்துரையாடல் - 2024.09.20



2024.09.22 ஆம் திகதி தேர்தல் ஆணைக்குழுவில் நடைபெற்ற சனாதிபதியைத் தேர்ந்தெடுப்பதற்கான உத்தியோகபூர்வ அறிவித்தலை வெளியிடும் நிகழ்வு



சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலொன்றுக்கான ஊடக பாவனை சம்பந்தமாக ஊடக நிறுவனங்களின் தலைவர்களுடன் நடைபெற்ற கலந்துரையாடல் - 2024.10.15



பாராளுமன்றத் தேர்தலை முன்னிட்டு அஞ்சல் மற்றும் அரச அச்சகத்தின் அதிகாரிகளுடன் 2024.10.02 ஆம் திகதி நடைபெற்ற கலந்துரையாடல்



பாராளுமன்றத் தேர்தலின்போது பாதுகாப்பு அலுவல்கள் சம்பந்தமாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருடனும் சிரேட்ட பொலிஸ் அதிகாரிகளுடனும் 2024.10.02 ஆம் திகதி நடைபெற்ற கலந்துரையாடல்



2024 பாராளுமன்றத் தேர்தல் தொடர்பாக வெளிநாட்டு தேர்தல் கண்காணிப்பு அமைப்புகளினால் வழங்கப்படும் அறிக்கையைக் கையேற்கும் நிகழ்வு - 2024.11.16



அரசாங்க அதிபர்கள், மாவட்ட பிரதி/உதவி தேர்தல்கள் ஆணையாளர்களுடன் நடைபெற்ற கலந்துரையாடல் - 2024.11.06



தேர்தல் செலவினத்தை ஒழுங்குபடுத்துதல் சட்டத்திற்கிணங்க பாராளுமன்றத் தேர்தல் பிரச்சாரத்திற்கான செலவின எல்லையை நிர்ணயிப்பதற்காக பெயர் குறித்த நியமனங்களைக் கையளித்த அரசியல் கட்சிகளுடன் நடைபெற்ற கலந்துரையாடல்


**மதியுரைக் குழு:**

ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க – தவிசாளர்

எம்.ஏ.பீ.சி.பெரேரா – உறுப்பினர்

அமீர் பாயிஸ் – உறுப்பினர்

அனுசயா சண்முகநாதன் – உறுப்பினர்

பேராசிரியர் லக்ஷ்மன் திசாநாயக்க – உறுப்பினர்

சமன் ஸ்ரீ ரத்நாயக்க – தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்

எச்.எம்.ரி.டி.ஹேரத் – செயலாளர்

ரசிக்க பீரிஸ் – மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் (தேசிய தேர்தல்கள்)

**பதிப்பு**

சன்ன பீ. த சில்வா

(பணிப்பாளர் – ஆராய்ச்சி மற்றும் திட்டமிடல்)

**கணினி பக்க வடிவமைப்பு**

அமில கமகே (தேர்தல் ஆணைக்குழு)

**அச்சீடு**

அரசாங்க அச்சகம்

**வெளியீடு**

சட்டம், விசாரணை மற்றும் திட்டமிடல் கிளை,

தேர்தல் ஆணைக்குழு



**உங்கள் கருத்துக்களையும் ஆலோசனைகளையும் எமக்கு எழுதி அனுப்பவும்:**

பதிப்பாசிரியர்

புள்ளடியின் பலம்,

தேர்தல் ஆணைக்குழு,

தேர்தல்கள் செயலகம்,

02, சரண மாவத்தை,

இராஜகிரிய,

இலங்கை.

(+94)112868441-42-43 (+94)112868426 info@elections.gov.lk www.elections.gov.lk elecomsl SriLankaElectionCommission Election Commission of Sri Lanka



இச்சஞ்சிகை தாங்கிவரும் ஆக்கங்களில் அடங்கியுள்ள விடயங்களுக்கான பொறுப்பு, அந்தந்த ஆக்கங்களை எழுதியவர்களைச் சாரும் என்பதுடன் அவற்றில் அடங்கியிருக்கும் விடயங்கள் தேர்தல் ஆணைக்குழுவின் கருத்து வெளிப்பாடன்று. இதன்கண் அடங்கியுள்ள விடயங்களை மேற்கோள்காட்ட எதிர்பார்ப்பதாயின், அதற்காக தேர்தல் ஆணைக்குழுவின் முன் அனுமதி பெறப்படுதல் வேண்டும்.